# சைவநீதி

விஷு - ஐப்பசி

# SAIVANEETHI

OCTOBER - NOVEMBER 2001



## பொருளடக்கம்


1. தருமம் ............................................ 01
2. திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் ............................................ 02
3. இறப்பு பிறப்பு ............................................ 04
(சித்தாந்தரத்தினம் . க. கணேசலிங்கம்)
4. கால ஓட்டத்தில் நம் சைவசமயம் ............................................ 09
(முருகவே பரமநாதன்)
5. கருத்தொருமித்த உள்ளக்கலப்பு ............................................ 12
(சிவசண்முக வடிவேல்)
6. மூவர் தமிழும் முருகனும் ............................................ 15
(இரா. பி. சேதுப்பிள்ளை.)
7. பசுக்காத்தல் ............................................ 17
(ஸ்ரீலஸ்ரீ . ஆறுமுகநாவலர்)
8. மன்றுளான் மன்றில் ............................................ 18
(சைவப்புலவர்மணி வ. செல்லையா)
8. சுப்பிரமணியக்கடவுள் ............................................ 21
(சிவ ஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள்)
9. சிவப்பிரகாசம் ............................................ 23
(மட்டுவில் ஆ. நடராசா)
10. The Defeat of Tharakasura ............................................ 28
(V. Sivarajasingam)
11. ThiruGnanasambanthar the Saiva Saint ............................................ 29
(S. Ratnapragasam)



# சைவநீதி மாத இதழ்

**பெறுமதி விபரம்**

தனிப்பிரதி ரூபா 25.00 ஆண்டொன்றிற்கு ரூபா 250.00

ஏனைய நாடுகளில் ஆண்டொன்றிற்கு ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US$ 15

சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.

**சந்தா அனுப்பவேண்டிய முகவரி :**

C. Navaneethakumar
42, Janaki Lane, Colombo - 04,
Sri Lanka. T.P. No : 595221

K.Ratnasabapathy
51, Thulasingam Street,
Pudupet, Madras - 600002,
South India. T.P. No : 8529984

உ

சிவமயம்

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# சைவநீதி

*மலர் 5 விஷு ஐப்பசி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் – 07*

கௌரவ ஆசிரியர் :
ஞானசிரோமணி
சைவப்புலவர்மணி, வித்துவான்
திரு. வ. செல்லையா

மதியுரைஞர் :
சிவஸ்ரீ. கு. நகுலேஸ்வரக்குருக்கள்
திரு D.M. சுவாமிநாதன்
அறங்காவலர்
ஸ்ரீபொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்
திரு. அ. கந்தசாமி
**Chairman U.P.S**
திரு. கு. மகாலிங்கம்
Sivayougasami Trust Fund

துணை ஆசிரியர் :
திரு. சு. சதாசிவம்

பதிப்பாசிரியர்:
திரு. வே. திருநீலகண்டன்
லஷ்மி அச்சகம்.

விநியோகம்
திரு. க. சீனிவாசகம்
ஓய்வுபெற்ற கோட்டக் கல்வி அதிகாரி

நிர்வாக ஆசிரியர் :
திரு. செ. நவநீதகுமார்
42, ஜானகி ஒழுங்கை,
கொழும்பு – 04
தொ. பே : 595221

## தருமம்

தரும நெறி தவறாது வாழுதல் வேண்டும். நல்லவை எவை? தீயவை எவை? என்று பகுத்தறியும் ஆற்றல் உடைய மனிதன் இன்று எதைச் செய்யலாம்? எது செய்யக்கூடாது? என்று தெரியாது தடுமாறுகிறான். தெரிந்தவர்கள் கூட அற்பலாபத்தின் பொருட்டு அதர்மவழி செல்கின்றனர்.

பிறருக்குத் துன்பம் தராத செயல் தருமம் பிறருக்கு உதவி செய்யாவிட்டாலும் துன்பம் செய்யாதிருத்தல் நன்று "சூரபன்மன் முதலியோருக்குக் காசிபர்"

" தருமம் என்றொரு பொருள் உளது தாவிலா
இருமை இன்பமும் எளிதின் ஆக்குமால"

என்று பாடத்தை ஆரம்பிக்கிறார். தருமம் ஒன்றே நிலையானது. தருமத்தால் இம்மை,மறுமை இன்பம் பெறலாம். தருமத்தால் அருளும், அருளால் தவமும், தவத்தால் ஞானமும், ஞானத்தால் பேரின்பமாகிய முத்தியும் கைகூடும் என்ற காசிபர் உபதேசம் சூரனாதியோர் செவியில் ஏறவில்லை. மாயை கூறியபடி யாகம் செய்து சகல செல்ல வாழ்வு பெற்று தருமவழி நில்லாது இந்திராதி தேவரை வருத்திய சூரபத்மன், தான்மட்டும்மன்றித்தன் குலத்தோடு அழிந்தான்.

தருமந்தன் வழிச் செல்கை ஒவ்வொருவரினதும் கடனாகும். தருமவழி நின்றல் வாழ்வு வளம் பெறும் தன்குலம் சிறந்துவாழும். மனத்திலே அழுக்காறு என்ற ஆறு உள்ளது. அதிலே பொறாமை என்ற ஆமை குடிகொண்டுள்ளது. இவற்றினால் தருமநெறி சிதைகிறது. ஆதலால் அழுகாறை அகற்றினால் பொறாமை அற்றுப் போகும். இந்நிலையில் மனம் தூய்மையுறும் வாழ்வு தரும வழிச் செல்லும் வாழ்வு வளம்பெறும் எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற நினைவுடன் செயற்படல் நன்மைபயக்கும்.

# திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்

**திருச்சேய்ஞலூர்** **பண் பழந்தக்கராகம்**

திருச்சிற்றம்பலம்

நூலடைந்த கொள்கையாலே நுண்டி கூடுதற்கு
மாலடைந்த நால்வர்கேட்க நல்கிய நல்லறத்தை
ஆலடைந்த நீழன்மேவி யருமறை சொன்னதென்னே
சேலடைந்த தண்கழனிச் சேய்ஞலூர் மேயவனே 1

நீறடைந்த மேனியின்க ணேரிழை யாளொருபால்
கூறடைந்த கொள்கையன்றிக் கோல வளர்சடைமேல்
ஆறடைந்த திங்கள்சூடி யரவம ணிந்ததென்னே
சேறடைந்த தண்கழனிச் சேய்ஞலூர் மேயவனே. 2

ஊனடைந்த வெண்டலையி னோடுப லிதிரிந்து
கானடைந்த பேய்களோடு பூதங்க லந்துடனே
மானடைந்த நோக்கிகாண மகிழ்ந்தெரி யாடலென்னே
தேனடைந்த சோலைமல்கு சேய்ஞலூர் மேயவனே 3

வீணடைந்த மும்மதிலும் வின்மலை யாவரவின்
நாணடைந்த வெஞ்சரத்தா னல்லெரி யூட்டலென்னே
பாணடைந்த வண்டுபாடும் பைம்பொழில் சூழ்ந்தழகார்
சேணடைந்த மாடமல்கு சேய்ஞலூர் மேயவனே. 4

பேயடைந்த காடிடமாப் பேணுவதன்றியும் போய்
வேயடைந்த தோளியஞ்ச வேழமு ரித்ததென்னே
வாயடைந்த நான்மறையா றங்கமோ டைவேள்வித்
தீயடைந்த செங்கையாளர் சேய்ஞலூர் மேயவனே. 5

காடடைந்த வேனமொன்றின் காரண மாகிவந்து
வேடடைந்த வேடனாகி விசயனொ டெய்ததென்னே
கோடடைந்த மால்களிற்றுக் கோச்செங்க ணாற்கருள் செய்
சேடடைந்த செல்வர்வாழுஞ் சேய்ஞலூர் மேயவனே. 6

பீரடைந்த பாலதாட்டப் பேணாத வன்றாதை
வேரடைந்து பாய்ந்ததாளை வேர்த்தடிந் தான்றனக்குத்
தாரடைந்த மாலைசூட்டித் தலைமைவ குத்ததென்னே
சீரடைந்த கோயின்மல்கு சேய்ஞலூர் மேயவனே. 7

மாவடைந்த தேரரக்கன் வலிதொலை வித்தவன்றன்
நாவடைந்த பாடல்கேட்டு நயந்தருள் செய்ததென்னே
பூவடைந்த நான்முகன்போற் பூசுரர் போற்றிசெய்யுஞ்
சேவடைந்த வூர்தியானே சேய்ஞவுலூர் மேயவனே 8

காரடைந்த வண்ணனோடு கனகம னையானும்
பாரடைந்த விண்பறந்தும் பாதமு டிகாணார்
சீரடைந்து வந்துபோற்றச் சென்றருள் செய்ததென்னே
தேரடைந்த மாமறுகிற் சேய்ஞலூர் மேயவனே. 9

மாசடைந்த மேனியாரு மனந்திரி யாதகஞ்சி
நேசடைந்த வூணினாரு நேசமி லாததென்னே
வீசடைந்த தோகையாட விரைகம ழும்பொழில்வாய்த்
தேசடைந்த வண்டுபாடுஞ் சேய்ஞலூர் மேயவனே 10

சேயடைந்த சேய்ஞலூரிற் செல்வன சீர்பரவித்
தோடடைந்த வண்கழல்சூழ் தோணிபு ரத்தலைவன்
சாயடைந்த ஞானமல்கு சம்பந்த னின் னுரைகள்
வாயடைந்து பாடவல்லார் வானுல காள்பவரே. 11

திருச்சிற்றம்பலம்

# இறப்பும் பிறப்பும்

சித்தாந்தரத்தினம் க.கணேசலிங்கம்

இறப்பும் பிறப்பும் மாறிமாறி வருகின்றன என்பது இந்தியா மதங்கள் பலவற்றின் கொள்கையாக உள்ளது. உயிர் பல பிறவிகளே எடுத்து அனுபவமும் அறிவும் பெற்று வளர்ச்சியடைந்து இறுதியில் இறைவனை அடைகிறது என்பது சைவ வைணவ சயங்களின் கருத்து

இவை பற்றிக் கூறும் வள்ளுவம் ஒரு மனிதன் உறக்கத்தில் ஈடுபடுவது போன்றது இறப்பு, உறங்கி விழிப்பது போன்றது பிறப்பு என்கிறது.

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு" - (குறள் 339)

மரணம் பற்றிய விளக்கம்

இறப்பு நிகழ்கையில் மனித அனுபவம் எப்படி இருக்கிறது என்பது குறித்த விளக்கங்கள் சில ஆராய்ச்சி வாயிலாகத் தரப்பட்டுள்ளன. ஆனால் பிறப்பு நிகழ்கையில் பிறந்த குழந்தையின் அனுபவம் பற்றிய விளக்கம் ஊகங்களாகவே உள்ளன. குழந்தை தன் அனுபவத்தை அறியும் நிலையிலும், விளக்கும் நிலையிலும் இல்லாமையே இதற்கான காரணங்கள்

மரணத்தின் விழிம்பிற்குச் சென்று, மருத்துவர்களால் இறந்ததாகக் கருதப்பட்ட சிலர் உயிர்த்தெழுந்ததுண்டு. இவர்களின் மரணத்தை அண்மிய அனுபவத்தை (Near Death Experience) மேல் நாட்டு அறிஞர் சிலர் ஆராய்ந்துள்ளனர். அவர்களின் ஆய்வின்படி மரணத்தை அண்மிய அனேகரின் அனுபவங்கள் ஒரே மாதிரியாக இருப்பதைக் காண முடிகிறது. மரணம் நேரும் பொழுது, முதலில் இருண்ட ஒரு பெருங்குழாய் வழியில் தாம் செல்வதாகவும், பின்னர் ஆனந்தமான தண்ணொளி கொண்ட ஒரு கம்பத்தின் அருகில் இருப்பதாகவும் , இந்த இனிய அனுபவத்தைப் பிரிந்து திரும்பவும் உடலுக்குள் வந்து உலக வாழ்வில் ஈடுபடத் தாம் விரும்பவில்லை என்றும் தமது அனுபவத்தைக் கூறியிருக்கிறார்கள்.

இந்த அனுபவத்தில் காட்டப்பட்ட இன்ப ஒளிக் கம்பத்தை கடவுள் என்று கருதுபவரும் உண்டு இது மூளையில் ஏற்படும் ஒரு வித இரசாயன மாற்றத்தால் (Chemical change) உண்டான அனுபவம் என்று கருதவும் இடமுண்டு. எவ்வாறாயினும் மரணமென்பது பயப்பட வேண்டிய அல்லது துன்பம் நிறைந்த ஒன்றென்று கருதவேண்டியதில்லை என்பது இதனால் தெரிகிறது

மரணத்துக்குப் பின்னர் ஒரு பிறப்பு உண்டென்பதை மேற்கிந்திய மதங்கள் பொதுவாக ஏற்பதில்லை. உலகவாழ்வின் இறுதி முடிவு நிரந்தர சொர்க்கம் அல்லது நிரந்தர நரகம் என்பது அவற்றின் கருத்து

| | |
|---|---|
| தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்<br>தீவினை என்னும் செருக்கு – 201 | தீவினை என்று சொல்லப்படும் ஆணவக் களிப்பினை, (தீவினையே செய்து பழகிய) தீயோர் அஞ்சமாட்டார். (ஆனால் அதைச் செய்தறியாத) மேலோர் அஞ்சுவர். |

தவறு செய்தவன் நிரந்தர நரகம் அடைகிறான் என்பதால் அவன் தன் தவறை உணர்ந்து திருந்துவதற்கு வழியில்லாத நிலை இதனால் ஏற்படுகிறது. இறப்புக்கும் பின்வரும் பிறப்புப் பற்றிக் கூறும் திருக்குறட் கருத்து இதற்கு முரணாக உள்ளது.

பிறப்பும் இறப்பும் உயிர்களுக்கு மாறி மாறி வருவன; அவை உயிர்கள் முத்தியடையும் வரை பல முறை நிகழ்வன, என்பது சைவசித்தாந்தக் கருத்து மேற் கூறப்பட்ட குறளுக்கு பறிமேலழகர் தரும் பின்வரும் விளக்கம் சைவ சித்தாந்தக் கருத்தாக உள்ளது.

"உறங்குதலும் விழித்தலும் உயிர்க்கு இயல்பாய்க் கடிதின் மாறி மாறி வருகின்றாற்போலச் சாக்காடும் பிறப்பும் இயல்பாய்த் கடிதின் மாறி மாறி வரும் என்பது கருத்து"

**வேதங்களின் கருத்து**

மரணத்தின் பின் உயிர் அடையும் நிலைகள் பற்றிய கருத்து சமய நூல்களில் பலவாறாகக் கூறப்பட்டுள்ளன. இது பற்றிய புராணக் கதைகளும் பலவாறாக உள்ளன.

வேத இலக்கியங்களின் ஒன்றான கடோபநிடதத்தில் நசிகேதன் என்பவன் இயமனிடம் இது பற்றிக் கேட்டதாகக் கூறப்படுகிறது. மரணத்தின் பின் உயிர் பிதிர் உலகம், கந்தர்வ உலகம், பிரஜாபதி உலகம் முதலிய உலகங்களில் பிறவி எடுப்பதாகக் கருதப்படுகிறது. சுவர்க்கத்துக்குச் செல்லும் உயிர்கள் முதலில் சந்திர மண்டலம் செல்வதாகவும் அங்கியிருந்து சிலர் பூமிக்கு திருப்பி அனுப்பப்படுவதாகவும் மற்றையோர் அக்கினி, வாயு, இந்திரன், வருணன், பிரஜாபதி ஆகியோரின் உலகங்களுக்குச் செல்வதாகவும் கௌஷீதகி உபநிடதம் கூறுகிறது. இந்த உலகங்களுக்கு ஒவ்வொன்றாகச் செல்லும் உயிர் இறுதியில் பிரமலோகத்தை அடைகிறது. என்றும் கருதப்படுகிறது. (இது போன்ற செய்திகள் ஏழாலை பண்டிதர் மு.கந்தையா அவர்கள் எழுதிய "சைவசித்தாந்த நோக்கில் கைலாசபதிஸ் மிருதி" என்ற நூலில் விவரமாகத் தரப்பட்டுள்ளன.)

மேற்கூறப்பட்ட உலகங்களுக்குச் செல்லும் வழி ஒளிமிக்கதெனக் கருதப்பட்டு தேவயானம் எனக் கூறப்படுகினறது. இது போன்று பிதுர்யானம் என்ற இருள் மிக்க ஒரு வழியிலே சென்று உயிர் பிதிர் உலகத்தை அடைந்து அனுபவம் பெறுவதாகக் கூறப்படுகிறது. தேவையான வழியில் போய் பிரமலோகத்தை அடைந்தவர் திரும்பவும் வந்து உலகில் பிறப்பதில்லை. பிதிர்யான வழியில் சென்று பிதிர்லோகத்தை அடைந்தோர் அங்கு பெறும் அனுபவம் முடிந்ததும் உலகிற்குத் திரும்பி வந்து பிறவி எடுப்பதாகக் கருதப்படுகிறது. இத்தகைய கருத்துக்கள் பலவேதநூல்களில் காணப்படுகின்றன.

இங்ஙனம் உலகிற்குத் திரும்பும் வழியும் பல நிலைகளை உடையதாக கூறப்படுகிறது. ஆகாயம் வழி மேகத்திற்கு வந்து, அதிலிருந்து மழை வழி ஏதாவதொரு

The evil will not fear- the excellent will fear, the pride of sin.201

பயிரை அடைந்து பயிரின் வழி அதன் விளைவான உணவின் மூலம் தந்தையை அடைந்து, தந்தையின் வீரயத்தின் மூலம் தாயின் கருப்பையை அடைந்து ஒருவன் பிறக்கிறான் என்ற கருத்து வேதங்களில் உண்டு இதன் அடிப்படையில் மேகம் மழை, நெல், தந்தை, தாய் ஆகிய ஐந்து இடங்களைத் தீயாகவும் அவற்றுடன் சேர்ந்து உயிரை ஆகுதியாகவும் பாவனை செய்தல் தியானத்தில் ஒரு சாதகமாகக் கொள்ளப்பட்டுள்ளது. இதனால் இது பஞ்சாக்கினி வித்தை என்று கூறப்பட்டுள்ளது. இந்தப் பஞ்சாக்கினி வித்தையைக் கைக்கொண்டு வேள்வி செய்வதால் மக்கட்பேறு இல்லாதவருக்கு மக்கட் பேறு கிடைக்கும் என நம்பப்படுகிறது.

வேத இலக்கியங்களின் அடிப்படையில் மேற்கூறப்பட்ட பஞ்சாக்கின் வித்தை போன்று பல வித்தைகள் தரப்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலனுக்குச் செய்யப்படும் வேள்வியாக உள்ளது. இத்தகைய வேள்விகள் செய்பவருக்கு உளவியல் ரீதியான மாற்றம் ஏற்பட்டு சில நன்மைகள் கிடைக்கலாம். ஆனால் அவை ஆகமங்களின் அடிப்படையில் அமைந்த சித்தாந்த சைவத்தின் வழி காணும் ஆத்மீக வளர்ச்சியையும் அனுபவத்தையும் தருமென்று கூற முடியாது. இங்கே யாழ்ப்பாணத்து நல்லூர் தவத்திரு ஆறுமுகநாவலர் அவர்கள் தனது திருத்தொண்டர் புராணப்பதிப்பில் எழுதிய கீழ்கண்ட உபோற்காதக் கருத்து கவனிக்கப்பாலது.

"இது காறும் கூறியவற்றால், சைவசித்தாந்தத்தன்றி பரமுத்தி சித்தியா தென்பது"..... வேதத்துள் விதித்த வேள்வி முதலியனவெல்லாம் அநித்தியமான காமியங்களைப் பயப்பன என்பதும் பெறப்பட்டன. வேள்வி முதலியன ஞானத்தைப் பயவாமை மாத்திரையேயன்றி தீவினைபோல் அது நிகழவொட்டாது தடைசெய்து நிற்றலும் உடையனவேயாம்

அப்பர் சுவாமிகளும் "காமியம் செய்து காலங் கழியாதே ஓமியம் செய்து அங்குளளத்துணர்மினோ" என்று அறிவுறுத்துகிறார்.

**சித்தாந்தத் தெளிவு**

மரணத்தின் பின் உயிர் அடையும் அனுபவங்கள் எடுக்கும் பிறவிகள் பற்றிய கருத்துக்கள் வேத உபநிடதங்களில் பலவாறாக உள்ளன. தெளிவான ஒருமித்த கருத்து அவற்றில் இல்லை இவ்வாறன்றி ஆகமாந்தமெனும் சித்தாந்தத்தின் கருத்து தெளிவாக உள்ளது.

முன்னை வினைப்பயனுக்கேற்ப உயிர் உடலைப் பெறுகிறது. பெற்ற உடலைக்கொண்டு பற்பல செயல் புரிந்து அனுபவங்கள் அடைந்து வினைப்பயனைக் கழிக்கின்றன. குறிப்பிட்ட காலமளவு, குறிப்பிட்ட வினைசெய்து முடித்தபின் உயிர் உடம்பை விட்டு நீங்குகிறது. என்பது சித்தாந்தக் கருத்து. ஒரு முட்டையில் உள்ள கரு அதற்குள்ளிருந்து, குறிப்பிட்ட காலம் வரை வளர்ச்சியடைந்து காலம் வந்தவுடன்

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும் – 202

தீவினைகள் துன்பங்களையே தருவதால், அத்தீவினைகள் தீயை விட மிகுதியாக அஞ்சத்தக்கவையாம்.

முட்டை தனித்துக்கிடப்ப அதனைப் பிரிந்து பறந்து செல்கிறது. முட்டைக்கும் குஞ்சுக்குமுள்ள இத்தகைய உறவே உடலுக்கும் உயிருக்கும் இடையிலானது எனத் திருவள்ளுவர் கூறுகிறார்.

**" குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே யுடம்போ டுயிரிடை நட்பு "** (குறள் 338)

உடம்பை விட்டுப் பிரிந்த உயிர் திரும்பவும் இன்னொரு உடல் எடுக்கிறது. மரணமும் பிறப்பும் உறக்கத்திற்குச் செல்வதையும் உறங்கி விழிப்பதையும் ஒத்தன என்பது திருவள்ளுவர் கருத்து

உறக்கத்தில் கனவு வருதலும் அது இன்ப துன்ப அனுபவமாய் அமைதலும் உண்டு உடலைப் பிரிந்த உயிர் அதன் வினைப்பயனுக்கேற்ப அடுத்த பிறவி எடுக்கமுன் இன்ப துன்ப அனுபவங்களைப் பெறுதலுண்டு இந்த அனுபநிலைகள் சொர்க்கம் நரகம் எனப்படும் பெற்ற உயிர் மீண்டும் ஒரு உடம்பை எடுக்கிறது. இங்ஙனம் இறப்பு, அதனை தொடரும் இன்ப துன்ப அனுபநிலை பின்வரும் பிறப்பு ஆகியவை உறக்கமும், அதனைத் தொடரும் கனவுகள் அதன்பின் வரும் விழிப்பையும் போன்றுள்ளன வள்ளுவத்தில் வரும் "உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு" என்ற குறள் இதனைத் தெளிவாக உணர்த்துகிறது.

திருநாவுக்கரசுநாயனாரின் தேவார வரிகளும் இதனை விளக்குகின்றன.

**"துறக்கப்படாத உடம்பைத் துறந்து வெந்தூதுவரோடு இறப்பன் இறந்தால் இருவிசும்பேறுவன் ஏறிவந்து பிறப்பன்"**.....

இன்ப துன்ப அனுபவங்களுக்கிடமான சொர்க்கம் நரகம் ஆகிய இரு நிலைகளையும் இரு விசும்பு என்ற கூறி, அவற்றின் அனுபவங்களின் பின் உயிர் பிறவி எடுக்கும் என்பது அப்பர் தேவாரம் தொடரிலிருந்து அறிய முடிகிறது. உடலைப் பிரிந்த உயிர் சொர்க்கம் நரக அனுபவங்களை எப்படி அனுபவிக்க முடியுமென்ற கேள்வி எழுகிறது.

**நுண்ணுடம்பு**

இறைவனைப் போல உயிரும் அனாதியானது. அது அனாதியே ஆணவம் என்ற மலத்தினால் பிணிக்கப்பட்டு தனது அறிவு, இச்சை, செயல் ஆகிய ஆற்றல்கள் வெளிப்பட முடியாது கிடந்தது இந்த நிலையை தாயுமானவ சுவாமிகள் "காரருளில் கண்ணிலாக் குழவி "போல் கிடக்கும் நிலையென்று கூறி விளக்குகிறார்.

உயிரின்மேல் கருனை கொண்ட இறைவன், இந்த நிலையை மாற்றி உயிருக்கு உதவுவதற்காக மாயையிலிருந்து நுண்ணிய உடம்பொன்றைப் படைத்தளிக் கின்றான். ஆக்கும் சரீரம் என்னும் இந்த உடம்பு புரியட்டகாயம் எனப்படும். மனம்,புத்தி, அகங்காரம் என்னும் அந்தக் கரணங்கள் (உட்கருவிகள்) மூன்றும் தன்மாத்திரைகள் என்று சொல்லப்படும் சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், ஆகிய ஐந்தும் சேர்ந்த

Because evil produces evil, therefore should evil be feared more than fire.202

எட்டுத்தத்துவங்களின் கூட்டாகியது புரியட்டகாயம் இது எல்லா உயிர்களுக்கும் இறைவன் முதல் முதல் கொடுத்த நுண்ணுடம்பு. இந்த உடம்பு உயிருடன் பிறவிகள் தோறும் சென்று கொண்டே இருக்கும். உயிர் முத்தியடையும்போது தான் நீங்கும்.

புரியட்டகாயம் என்னும் நுண்ணுடம்பைப் பெற்ற உயிர் அதன் துணையுடன் சிறிது செயற்படத் தொடங்குகிறது. அதன் செயலுக்கான பயனுக்கேற்ப அதற்கும் பருவுடலை இறைவன கொடுக்கிறான இது உயிரின் பிறவியாகி, அப்பிறவியில் வினைசெய்து இறந்து பின் வினைப்பலனுக்குகேற்ப இன்னொரு பிறவி எடுத்து வினை செய்து இங்ஙனமே இறப்பும் பிறப்பும் மாறி மாறிச் சங்கிலித்தொடர்போல் தொடர்கிறன. போற்றிப் ப∴றொடை என்ற சைவசித்தாந்த நூல் இதனை விளக்குவதைக் காணலாம்.

முத்தியடையும் வரை உயிருடன் தொடர்ந்து செல்லும் புரியட்டகாயம் என்னும் நுண்ணுடம்பின் துனையுடன் சொர்க்க நரக அனுபவங்களை உயிர் பெறுகிறது.உயிர் செய்யும் வினையின் பயன் புரியட்ட காயத்திலுள்ள புத்தி என்னும் தத்துவத்தில் பதிவாகிப் பின்வரும் பிறவிகளில் பலனுக்கு வருகிறது.

உயிர் பிறவிகள் தோறும் வினை செய்து, வினையினால் அனுபவமும், அனுபவத்தினால் அறிவும் பெறுகிறது. அறிவுவளர வளர உயிரைப் பிணித்த ஆணவத்தின் பிடிப்பு தளர்கிறது. நான் எனது என்ற அகந்தை அல்லது செருக்குக்கு ஊற்றாக இருப்பது ஆணவம் இந்தச் செருக்கை அழித்தவனுக்கு பிறப்பற்ற மேலான இன்பநிலை கிடைக்கும் என்பது வள்ளுவரின் கருத்து.

**"யான் எனதென்னும் செருக்கறுப்பான் வானோர்க் குயர்ந்த உலகம் புகும்"** - (குறள் 346)

ஆணவப்பிடி முற்றாக அகன்றபோது வினை செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது. அதற்கு இறையருளின் துனை வேண்டும் எல்லாவகையிலும் சிறப்பான செம்பொருள் சிவன் என்று சைவசமயம் போற்றுகிறது. "குறைவிலா நிறைவே" "செம்பொருள் துணிவே" என்று சைவ அருளாளர்கள் இறைவனைப்போற்றுகிறார்கள்.

பிறவித் துன்பத்திற்குக் காரணமானது அறியாமைக்குத் துனைபுரியும் ஆணவம் "அறியாமை ஆணவம்" என்று உண்மை விளக்கம் ஆணவத்தின் இயல்பை விளக்கும் அறியாமை மிக்க பிறப்பு நீங்குவதற்கு சிவமெனும் செம்பொருளைக் கண்டு உய்தி பெறலே அறிவு மிக்க செயல் என்று சைவ சித்தாந்தம் உணர்த்துகிறது. இதனைத் திருக்குறள் பின்வருமாறு விளக்குகிறது.

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம் பொருள் காண்ப தறிவு" (குறள் 358)

பிறவில் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதவர் - (குறள் 10)

| | |
|---|---|
| அறிவினுள் எல்லாம் தலைஎன்ப தீய<br>செறுவார்க்கும் செய்யா விடல் – 203 | தம்மைப் பகைப்பவர்க்கும் தீயனவற்றைச் செய்யாது விடுதல், அறிவுடைய செயல்கள் எல்லாவற்றுள்ளும் தலையானது |

# கால ஓட்டதில் நம்சைவசமயம்

முருகவேபரமநாதன்

உலகிற் பலசமயங்கள் உள்ளன. அவற்றைக் கைக்கொள்மக்களும் வாழ்கிறார்கள். அவற்றின் அமைப்பு, கோட்பாடு, தலைமைத்துவம், ஆளுமை, கொள்கை, இலட்சியம் வேறுபட்டவை. ஆலய அமைவு, வழிபாட்டுமுறை, அனுட்டானம், ஆவணம், சமுதாயக்கண்ணோட்டம், கைந்நூல்,குரவர், தோத்திரசாத்திரம், பழக்கவழக்கம், ஏன் நாகரிகம், கலை,பண்பாட்டுக்கோலம், சின்னங்கள், கலாச்சாரம் சற்று வித்தியாசமானவை, எனினும் யாவரும் ஆறறிவுபடைத்தவர்களே இவர்கள் மத்தியிற் பொதுமையும் சிறப்பும் உண்டு ஒற்றுமையும் வேற்றுமையும் நிலவுவது சகசம் எனினும் சேர்ந்து செறிந்து தோழமையுடனும் வாழ்வர். இச் சமயங்களிடையே பாரியபோர் மூட்டமும் இருந்தது. கலவரங்களும் ஏற்பட்டன. இதனால் மனித இழப்புகளும் அநந்தம் இருந்ததும் மனிதநேயம், மனிதம் சிறக்கவும். புரிந்துணர்வோடு ஒருவரையொருவர் மதித்து வாழவும், இணைந்து பழகவும், மனச்சாட்சியைப்பேணி, போற்றி சமுகமாகவும், சமாதானமாகவும் தம்மை வழிநடத்தவும், நீதியை நிலைநிறுத்தவும். சிறந்த சமுதாயத்தை உருவாக்கவும் சமயம் ஒரு வழி காட்டியாய் அமைந்தது எனலாம். காலப் போக்கில் உலகியல் நடைமுறை வாழ்வில் ஒரு அம்சமாகவே மாறிப்போன மாதிரிந்தான் சமயம்.

முற்போக்குச் சிந்தனைகள் தொழிற்படச் சமயங்களிற் பலமாற்றங்கள் காணப்படினும் சமயமும் சமயியும், சாதனை நடைமுறையும் அற்றுப்போகவில்லை. இப்படியான கண்ணோட்டத்தில் நாம் என்ன சமயம் என்ற வினா எழுகிறது. நாம் சைவ சமயிகள் சிவனையே முழுமுதற்பொருளாய்க் கொண்டது சைவம். இன்னோர் வாய்பாட்டாற் கூறின் சிவசம்பந்தம் உடையது சைவம், ஆக சிவசம்பந்தம் உடையவர்கள் சைவர்கள் இச்சமயத்திலே ஊறித் திளைத்தவர்களே சைவ சமயிகள். அண்மைக்காலங்களில் சிறப்பாகச்சைவசமயிகள் இந்துமதம், இந்துமதபீடம், இந்துதர்மம், இந்துமதகுரு, இந்துமாமன்றம், இந்துசமயப் பேரவை என்ற பிரயோகங்களை மேற்கொள்ளுகின்றனர். தென் தமிழ் நாட்டிலும் ஈழவள நாட்டிலும் நிலவும் சமயம் சைவமே இன்று சைவச் சாப்பாடு என்ற குறுகிய வட்டத்துட் சைவம் ஒடுங்கிவிட்டது. காரணம் மொழிப்பற்று, சமயப்பற்று அருகுவதால் சைவப் பிடிமானம் நெகிழ்ந்து போகக்காணலாம். சைவம் சிலர் நோக்கிற் சைபர் ஆனமைதான் ஒட்டு மொத்தமாகச் சைவ உறைப்பு பிறசமயங்களால் பேதலிக்கப்பட்டு விட்டமையும் ஒருகாரணியாகும்.

காரைக்காலம்மையார் தொட்டு நால்வர்வழி பலமகான்களின் வரவால் சைவசமயக் கோணல் நிமிர்த்தப்பட்டது. வட

To do no evil even to enemies will be called the chief of all the virtues.203

நாட்டு ஆக்கிரமிப்பு, ஆரியர்படையெப்பு, மொகலாயர் வருகை, பல்லவர் ஆட்சி, வைதிகப்பரம்பல், களப்பிரர், காளாமுகர், பைரவர் ஊடுருவுல், சமண, பௌத்த, வைணவத் தாக்கங்கள் போன்ற காரணிகள் சைவ நெறியைப் பெரியதும் தாக்கின - இவற்றையெல்லாம் எதிர்த்து சைவத்தை நிலையூன்றச் செய்தபின், போர்த்துக்கேய, ஒல்லாந்த வருகையால் சமய மாற்றமே நடந்து ஆலயங்களும் அழிக்கப்பட்டன. இவ்வீழ்ச்சியின் பின்னர் ஆங்கிலேயர் காலத்திற் சமய சுதந்திரம் கொஞ்சம் சைவத்தைத் தளிர்க்கச் செய்தது இக்காலத்திற் தடம் புரண்ட சமயம், நாவலர் போன்ற சக்திமான்களால் மீளவும் கட்டி எழுப்பப்பட்டது.

எனவே சைவம் தலை நிமிர்ந்து தனையுணர்ந்து வாழத்துவங்கியது சமயக்கல்வி, வழிபாடு, ஆலயச்சூழல், ஒழுங்கும் ஒழுகலாறும், வாழ்வும், வரையறவும், வளமும் பழக்கவழக்கங்கள், நீதிநியாயம் அறம்,விட்டுக் கொடுப்பு, இரக்கம், விழுமியம், ஆளுமை, முன்னேற்றம், சமுதாயவிழிப்புணர்வு, மேம்பாடு, எனப் பன்முகநோக்கிலும் சமயப் பரியமாணங்கள் தக்க முன்னேற்றம் கண்டு ஒரு ஆரோக்கியமான வாழ்க்கை நீரோட்டத்துடன் மக்கள் தம்மை வழிநடத்தினர். இப்படியான சுப சூசக நிலையில் மக்கள் நிம்மதியான அமைதியை முன்னெடுத்துச் சென்றனர். வாழ்க்கைத் தேர் தழம்பாமல் ஓடிய வேளை எதிர்பாராமல் ஏற்பட்ட இக்கட்டினால் மக்கள் தடம்புரண்டனர். அவர்களைப் பேணச் சைவம் நடைமுறைகளை தாபன ரீதியில் எடுக்காமையால் புறச்சமயத்தவர் உதிவிக்கரம் நீட்டி அழைத்துச் சைவசமயிகளை கிறீத் தவர்களாக்கியமை பிரமாணிக்கமாம், இந்நிகழ்சி புலம் பெயர்ந்து ஐரோப்பா, பிரித்தானியா, அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, போன்ற நாடுகளின் வாழும் சைவத்தமிழர் மத்தியிலும் வெகுதீவிரமாக இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது பரம்பரை பரம்புரையாகத் தடிப்பான சைவ சமயிகள் மதம் மாறிய தோடமையாது மற்றவர்களையும் மாற்றத்தடம் போடுகிறார்கள் ஒருபடி மேலே ஆலயம், உருவங்கள் பூசை விரதம் விழா சடங்குகள் போன்றவற்றைக் கொச்சைப்படுத்தி இழிவும் செய்வர். மறுகரையில் ஆலயம் அமைப்பதில் மட்டும் ஆர்வமும் அவசரமும்படும் ஒரு சாரார் சமயமாற்றத்தைத் தடுத்து நிறுத்தாமல் வர்த்த நோக்கொன்றையே முன்வைத்துத் தொழிற்படவும் காணலாம். பொதுமக்கள் வெகு ஜாக்கிரதையாய் சைவம் கட்டவிழாமல் இருப்பதில் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்.

சமுதாயரீதியில் கலப்பாகத் திருமணம் செய்வோர் தம் சமயத்தை விட்டு கிறீஸ்தவர் களாகுவதும், ஆகாமல் இருப்பவர்களின் சந்ததியினர். கிறீத்தவ சமயத்தை மேற் கொள்வதும் எதைக் காட்டுகிறது. கிறீத்தவச் செல்வாக்கையே காட்டுகிறது. இங்கேயும் சைவசமயம் பெலவீனப்படுவதையே காணலாம். இதற்கு மேலே கடந்த சிலத சாப்தங்களாக சைவத்தை ஊடுருவும்யுக்தி

| | |
|---|---|
| மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்<br>அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு -204 | ஒருவன், பிறனுக்குக் கேடு தரும் செயலை, மறந்தும் கூட எண்ணக்கூடாது. எண்ணினால், எண்ணியவனுக்குக் கேடு தரும் செயலை அறக்கடவுள் எண்ணும். |

மாறியுள்ளது. புத்திஜீவிகளாக, அறிவு ஜீவிகளாகக் கிறித்தவர் சைவசமயத்துள் ஊடுருவக் காணலாம். சைவ சித்தாந்தக் கொள்கைகளைப் படிப்பதும், பட்டம், பெறுவதும், அதைக் கருவியாக்க கொண்டு சைவத்துட்புகுந்து பிரக்கியாதி பெறுகிறார்கள். சைவத்தையும், அதுசார் பன்முகவளர் வையும், திட்ப நுட்பங்களையும் அறிந்து நம்சமயத்தை வளர்க்கவா இவர்களின் துறையில் அறிவு பெறுகிறார்கள் வீரமாமுனிவரில் இருந்துவளர்ந்த இவ்வழி முருகேசுப் போதகர் போன்றவர்களையும் வழிநடத்தியமை வரலாறு, பேசும் நிதர்சனம் பேய்க்குப்படித்து தாய்க்குவிட்டமாதிரியாய் சைவம் நலிய, சைவத்தை நலிவிக்க, கிறீத்த ஆதரவை சைவத்துட் செல்வாக்கமையச் செய்யும் மறைமுக முயற்சிகளே இவை. இதை உள்வாங்கவும், உணரவும், பிரஞ்ஞையிற் கொண்டுவரவும், நடக்கவும். சைவசயிகள் மீளவும் உசார்நிலையில் இருக்கவேண்டிய காலகட்டம் இதுவாகும். ஆலயம் ஆயிரமாயிரமாய் அமைத்து எம்மை சுரண்டமுன் ஆலயத்தைமையமாக்கி சைவசமயத்தை மக்கள் மத்தியிலே நிலைநிறுத்துவதும் அந்தணரின் தலையாய கடமைகளாம். சடங்குகளிலே கிரியைகளிலே தோயும் சமயம் இலகுவாக பக்திநெறியை மக்கள் மத்தியிலே ஆழப்பதிக்க வேண்டும். சைவாலயங்களிலே வேற்றுமதவடிவங்களை வைப்பதும், சித்தாந்தப் போர்வையிற் கிறீவரை வியப்பதும் நல்ல சூழ்நிலையை எடுத்துக்காட்டுவதாய் இல்லை சமரசம், எம்மதமும் சம்மத மென்று பேசும் ஞானிகள் இந்து சமயத்திலே தான் நிறைய உள்ளனர். சமய வைரம் பகைமை, எதிர்ப்பு இல்லாது ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற திருமூலரும் சிவனின் சிறப்பைத் தனித்துவமாகப் போற்றியுள்ளார் கோயில் இல்லா ஊரிற்குடியிருக்க வேண்டாம் என்ற பழமொழியின் கருதுகோள் என்ன என்பதை கலாநிதி பாலசுந்தரம் அவர்கள் நோக்கிற் கண்டு நம்மை வழி நடத்துவாம்.

உலகநாடுகளின் வரலாறு மதங்களுடன் தொடர்பு கொண்டிருப்பதையும் குறிப்பாக ஸ்ரீ லங்காவின் வரலாறு புத்தமதத்தோடு இணைந்திருப்பதையும், ஈழத்துச் சைவசமயிகளின் வரலாறும் கோயில் வரலாறுகள் கோயில் ஆவணங்களுடன் இணைந்திருப்பதையும் குறிப்பிட்ட கோயில்வரலாறே அப்பிரதேச இனமக்களின் வரலாறு என்பதையும் காணமுடிகிறது. எனவே கோயில் வரலாறு தருவதால் கோயில் உள்ள ஊரில் வாழ்வதால் வரலாறு உள்ள இனமாக வாழலாம் என்ற உண்மை அப்பழ மொழியிற் பொதிந்து கிடக்கிறது.

எனவே வரலாற்றுப் படிவு உள்ள ஈழமணித்திருநாட்டின் சைவ சமயிகள் எங்குவதியினும் தம்புராதன சரித்திரத்துக்கு மாசு மறு எற்படாமல் சைவத்தையும் புரிந்து தாமும் சைவ நெறியை மேற்கொண்டு கண்மூடிவழங்களைக் கை விட்டு விஞ்ஞானக் கண்ணோட்டத்திற்கும் தம் எதிர் காலச்சந்ததியை வழி நடத்துவார்களாக.

Even through forgetfulness, meditate not the ruin of another. Virtue will meditate the ruin of him who thus meditates.204

# கருத்தொருமித்த உள்ளக் கலப்பு

சிவ : சண்முகவடிவேல்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருநாவுக்கரசு நாயனார் ஆகிய எம்பெருமக்கள் இரு பேரினதும் முதற் சந்திப்புச் சீர்காழிப் பதியில் நிகழ்கின்றது. சிதம்பர தரிசனம் செய்த ஆளுடைய அரசு சம்பந்தப் பிள்ளையாருடைய திருவருட் சிறப்புக்களைக் கேள்வியுறுகின்றார். வள்ளலாருடைய திருவடிகளை வணங்கும் ஆர்வத்தோடு வளமலி புகலியை நோக்கி வாகீசர் வருகின்றார். அப்பருடைய வருகையை ஆளுடைய பிள்ளையாரும் அறிந்தார்.

அம்மை திருமுலைப்பால் உண்ட பிள்ளையார் கல்மிதப்பில் உகைத்தேறும் திருநாவுகச்கரசரைக் காணும் விருப்போடு எதிர்கொள்கின்றார்.

திருநாவுக்கரசர் தொண்டர் திருக்கூட்டத்திடைச் சென்று குற்றமில்லாத அன்பினோடும் ஞானக்குழந்தையின் குரைகழல் வணங்கினார். கானத்தின் எழுபிறப்பான கவுணிய குலதீபர் எழுதரிய மலர்க்கையால் நாவரசரை எடுத்தருளினார்.

அப்பரே! என்று அன்பொழுக அழைத்தார் பிள்ளையார். பிள்ளாய்! என்று வாய்மை திறம்பா வாகீசர் வாய் மொழிந்தார்.

அக்காட்சியைக் கண்டார்கள் இரு திறத்து மாந்தர்கள். இன்பம் எய்தினார்கள். உம்பர்களும் போற்றிப் புகழச் சிவம் பெருகும் ஒலி உலகம் எல்லாம் நிறைத்தார்கள்.

பிள்ளையார் கழல் வணங்கப் பெற்றேன் என்று அரசு ஆனந்தித்தார். வாகீசர் தமை வணங்கப் பெற்றதற்கு வள்ளலார் மனம் மகிழ்ந்தார். இவ்வாறு உள்ளத்தில் நிறைந்த காதலினால் ஒருவர் ஒருவரில் கலந்தார்கள். இருவரும் உள்ளத்தில் உண்மை ஓங்கப்பெற்றவர்களாதலினால் கள்ளமில்லாத நெஞ்சு கலக்கப்பெற்றார்கள். ஆண் பெண் என்ற பேதமின்றி கருத்தொருமித்த மெய்யுள்ளங்கள் பொய் பொருந்தாத திருவருட் கலப்பில் திளைப்பார்கள். அந்த ஒருமை உறவால் உலகம் பெருவாழ்வு பெறும். அத்திருவருட் கலப்புக் காலத்தை வென்றது. தமிழை வாழ வைத்தது. சைவத்தை வளர வைத்து.

கரண்ட மலி தடம்பொய்கைக் காழியர் கோனையும் நீண்டவரை வில்லியார் வெஞ்சூலை மடுத்தருளி நேரே முன்னாள் ஆண்ட அரசையும் மீண்டும் சந்திக்க வைக்கிறது திருவருள் அச்சந்திப்புத் திருப்புகலூரில் நிகழ்கின்றது. இருபெரு மக்களும் தொண்டர் புடை சூழ எழுந்தருளி வருகின்றார்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் கலந்தபோது இரண்டு நிலவின் கடல்கள் ஒன்றாக அணைந்தன போல இசைந்தன என்பர் சேக்கிழார். திருவருளும் திருவருளும் அன்பும் அன்பும் வாய்மையும் வாய்மையும்

| | |
|---|---|
| இலன்என்று தீயவை செய்யற்க செய்யின்<br>இலன்ஆகும் மற்றும் பெயர்த்து -205 | நான் வறியவன் என்று கருதி (அவ்வறுமை நீக்கற் பொருட்டுத்) தீயனவற்றைச் செய்ய கூடாது. செய்தால், மீண்டும் வறியவனாவான். |

ஒன்று கலத்தல் அல்லவா அது அதனால் அன்றே உடன் உறைவின் பயன் பெற்றார் என்பர் தெய்வப்புலவர் சேக்கிழார் ஒரே கொள்கை கொண்ட இருபேருள்ளங்கள் உடன் உறைவால் பேசா அனுபூதி பிறக்கும் ஆசாபாசக் கலப்பற்ற திருவருள் இன்பம் இயல்பாகவே உயிர்களை மகிழ்விக்கும் வினைகளை விலக்கும்

திருவீழிமிழலையினில் எம்பெருமக்கள் இருவரும் இறை அருளால் அமுது அளித்தார்கள் அடியார்களுக்கு இறைவர் இருவருக்கும் படிக்காசு வழங்கினார் திருநாவுக்கரசு நாயனார் நாட் கூறு தவறாமல் திருமடத்தில் அமுது செய்வித்தார் அது கண்ட பிள்ளயைார் தாமும் வாசி தீரும் காசு பெற்று உரிய நேரம் தவறாமல் அடியார்களுக்கு உணவு உதவுனார்.

திருமறைக்காட்டில் பிள்ளையாருடைய வாக்குப்படி திருக்கதவம் திறக்கப் பாடினார் திருநாவுக்கரசர். அதே போல் வாய்மை திறம்பாத வாகீசருடைய வாக்கின் படி திருகதவம் அடைக்கப் பாடினார் ஆளுடைய பிள்ளையார்.

திருவாய்மூரில் முத்தமிழ் விரகர் நேரே காட்சி கொடுத்தருள ஆடல் கண்டு பணிந்தேத்தி அரசு அங்கு காணக் காட்டினார் கவுணியர் குலதீபர்.

திருபூந்துருத்தியில் காழியர்கோன் தமைத் தாங்கும் மணிமுத்தின் சிவிகையினை திருவாமூர் கோன் தாங்குவாருடன் தாங்கிச் சிந்தை களிப்புற வந்தார். எங்குற்றார் அப்பர் என்றார் பிள்ளையார்.

உம்மடியேன் உம்அடிகள் தாங்கிவரும் பெருவாழ்வு வந்தெய்தப் பெற்றிங்குற்றேன் என்றார் அப்பர்

அதுகேட்டு வள்ளலார் அரசினை வணங்கினார். வாகீசர் அவர் வணங்கா முன் தாம் வணங்கினார். இவ்வாறான தூய்மையும் வாய்மையும் மேன்மையும் நேர்மையும் நிறைந்த திருவருட் கலப்பை உலகில் வேறு எத்திசையில் காண்பது; தமிழ்ப்பண்பும் சைவத்தின் சீரிய ஒழுக்கமும் தமிழ் நிலச் சொத்து.

அதே போன்ற ஆதங்கமான திருவருட் கலப்பு நிகழ்வு சுந்தரமூர்த்தி நாயனார் சேரமான் பெருமாள் நாயனாருடைய சந்திப்பில் சிந்திக்க வைக்கின்றது.

திருவாரூரில் அந்தணாளர் பெருமானும் அரசர் பெருமானும் சந்தித்து வந்திக்கின்றார்கள். சேரலனார் வன்றொண்டரை வணங்கினார். முன்பு பணிந்த பெருமாளைத் தாமும் பணிந்தார் ஆரூரர். ஆர்வத்தொடு தழுவினார். அன்பு பெருக அரசரும் ஆரஅணைத்தார். இன்ப வெள்ளத்திடை நீந்தினார்கள். கரை ஏற மாட்டாதவர் போல அலைந்தார்கள். என்பு உருகினார்கள் உயிர் ஒன்றினார்கள். உடம்பும் என இசைந்தார்கள். அத்தன்மை கண்ட திருத்தொண்டர்கள் அளவில்லாத மகிழ்வு எய்தினார்கள். ஒருவர் ஒருவரிற் கலந்த உணர்வால் இன்ப மொழி இயம்பினார்கள். இவற்றினை வேறு எங்கு காண இயலும் ஆண் பெண் உறவு உடலோடு சம்பந்த முடையது. இது உயிரோடு கலந்தது. அதற்கு அப்பால்

Commit not evil, saying, "I am poor" if you do, you will become poorer still.205

திருவருள் பேருணர்வின் ஐக்கியப்பாடு சொல்லொணாத துரியாதீதத்தில் நிகழும் திருவருள் கலப்பு.

சேர நாட்டிற்குச் சுந்தரரைத் தமிழின் பெருமாள் அழைத்துச் சென்றார். மாளிகையில் சிங்கா சனத்தின் மீது அமர வைத்தார். அரிய திருவடி பூசை அளித்தார். சந்தனப் பூச்சு வாசனைத் திரவியங்கள், பூமாலைகள், பொன்மாலைகள் எல்லாம் ஆசை தீரப் புவியரசர் கவிஅரசருக்கு அணிந்து அலங்கரித்தார். எஞ்சியவற்றைத் தமக்காக்கிக் கொண்டார். இவ்வாறு காவலனார் சுந்தரரிடத்தில் காதல் செய்தார். சைவம் வெறும் போதனைகளைப் போதிக்கவில்லை இவ்வாறான சாதனை களையும் சாதித்தது. அது தான் வாழ அல்ல உலகம் வாழ உயிர் வாழ சைவம் வாழ திருவருள் என்றும் நின்று நிலைக்க.

சுந்தரர் திருவாரூக்கு எழுந்தருளிய போது இன்று உமது பிரிவு ஆற்றேன், என்றார் அரசன். என்னுயிருக்கு இன்னுயிராம் எழில் ஆரூர்ப் பெருமானை வன்நெஞ்சம் கள்வனேன் மறந்திரேன் என்றார் சேரமான் தோழர் பாரோடு விசும்பாட்சி எனக்கு உமது பாதமலர் என்றார் அருட் சேரர். மீண்டும் சுந்தரர் சேரநாட்டிற்கு வந்தார். அது கேட்டுச் சேரனார் என் ஐயன் அணைந்தான். எனை ஆளும் அண்ணால் அணைந்தான் ஆரூரில் சைவன் அணைந்தான் என் துணையாம் தலைவன் அணைந்தான் தரணி எல்லாம் உய்ய அணைந்தான் என்று வாய் ஓயாது வாழ்த்தினார்

சிந்தை மகிழும் சேரலனார் திருவாரூரர் தங்கள் மேனி வேறானதாகவும் ஒன்றாம் தன்மையர்கள் ஆனார்கள் ஒருவர் ஒருவரில் கலந்து குறைப்பாடிதவரானார்கள் உயர்ந்த காதலர்களானார்கள் இருவருடைய நட்பின் உரிமையைக் கண்டவர்கள் கரங் கூப்பி வணங்கினார்கள் பெருகும் மகிழ்ச்சி கலந்து ஆரவாரித்தார்கள்.

இவ்வாறான ஒரு திருவருட் காதல் சுந்தரருக்குச் சேரலனார் மீது. அதே போல அரசரக்கும் அந்தணர் மீது பொருள் இலக்கணத்திலும் காண இயலாத இன்ப நிலையைச் சைவ உலகு தாங்கி நிற்பது பெருந்தவப் பயனே ஆகும். பிரிக்க ஒண்ணாத அந்தப் பேரன்பின் விளைவாகவே சுந்தரரோடு திருக்கயிலையைச் சென்று எய்தும் பேரின்பப் பெருநிலை முதற் சேரருக்கு முன் வந்து வாய்க்கப் பெற்றது.

உலகியலில் ஆண் பெண் பாலாருடைய அன்புடன் நெஞ்சங்கள் கலப்பதும் உண்டு. செம்புலப் பெயனீர் போல, அன்புடை நெஞ்சம் தாங்கலந்தனவே (குறுந்தொகை40) அக்கலப்பு நிலையில்லாதது. பிரிவதும் உண்டு காலவனங் கடந்து நில்லாது உலகுக்குப் பயன் விளைக்காது. தன்னலம் கருதியது. திருவருட் கலப்புத் தன்னலம் அற்றது. உலக உய்வை உயிரோட்டமாக உடையது. திருவருள் நெஞ்சக் கலப்பு என்றும் நின்று நிலாவுக அரன் நாமமே சூழ்க வையகம்.

| | |
|---|---|
| தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால<br>தன்னை அடல்வேண்டா தான் – 206 | துன்புறுத்தும் தீவினைகள் தன்னைச் சேர்ந்து வருத்துவதை விரும்பாதவன், தீவினைகளைத் தான் பிறர்க்குச் செய்யாதிருக்க வேண்டும். |

# மூவர் தமிழும் முருகனும்

இரா. பி. சேதுப்பிள்ளை.

தமிழ் நாட்டில் முருகப்பெருமான் கோவில் கொண்டுள்ள இடங்கள் பலவாகும். அவற்றுள் சில பழம்பதிகள் தேவாரப் பாமாலை பெற்றுத் திகழ்கின்றன. திருமுருகாற்றுப்படையில் முருகவேளுக்குரிய படை வீடுகளுள் ஒன்றாகக் குறிக்கப்பட்ட திருப்பரங்குன்றம் தேவாரப் பாடல்பெற்ற பதிகளுள் ஒன்று. இன்னும், முருகன் பெயரோடு தொடர்புற்று விளங்கும் பாடல் பெற்ற பதிகள் சிலவுண்டு. சோழநாட்டில் நாகப்பட்டினத்திற் கருகேயுள்ள வேளூர் என்னும் மூதூர் முருகன் பெயரைத் தாங்கி நிற்கின்றது. பழங்காலத்தில் சோழர் தலைநகராகத் திகழ்ந்த திருவாரூருக்குக் கீழ்த்திசையில் அமைந்த காரணத்தால் அவ்வூர் கீழ்வேளூர் என்னும் பெயர் பெற்றது போலும். அவ்வூரில் "மாதவம் வளர்த்த வேலவன்" பெருமையை ஆன்றோர் புகழ்ந்துள்ளார்கள். கீழ்வேளூருக்கு அண்மையிள்ள சிக்கல் என்னும் பாடல்பெற்ற பதியில், கோயில் கொண்டருளும் 'சிங்கார வேலவர்' ஆண்டுதோறும் சிவபெருமானிடம் வேல் வாங்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாய்விளங்ககின்றது.

முருகனருள் பெற்ற மற்றொரு மூதூர், தலையாலங் கானத்துக் கருகேயுள்ள பெருவேளூர் ஆகும். இப்பெரும் பதியை அப்பர் பெருமானும் திருஞான சம்பந்தரும் பாடியுள்ளார்கள்.

"விரிவிலா அறிவினார்கள்
வேறொரு சமயம் செய்தே
எரிவினாற் சொன்னா ரேனும்
எம்பிராற் கேற்ற தாகும்
பரிவினாற் பெரியோ ரேத்தும்
பெருவேளூர் பற்றினானை
மருவிநான் வாழ்த்தி உய்யும்
வகையது நினைக்கின் றேனே"

என்ற அருமைத் திருப்பாரசுரம் அப்பரால் இப்பதியிலே அருளப் பெற்றதாகும். இந்நாளில் இவ்வூர் காட்டூர் ஐயன்பேட்டையென வழங்குகின்றது.

திருஞானசம்பந்தப் பெருமான் பிறந்தருளும் பேறு பெற்ற சீகாழியின் அருகேயுள்ள வைத்தீச்சுவரன் கோயிலின் பழம்பெயர் புள்ளிருக்கு வேளூர் என்பது. புள்ளும் மறையும் முருகவேளொடு இறைவனை வழிபட்டமையால் இப் பெயர் அவ்வூருக்கு அமைந்ததென்பர். முருகவேளாகிய முத்துக் குமாரன் அப் பதியிலே அமர்ந்து அடியார்க்கு இன்றும் அருள் புரிகின்றார். ஆதலால், கந்தபுரி என்ற பெயரும் அவ்வூருக்கு வழங்குகின்றது. அப் பதியில் அமைந்த முத்துக்குமாரனை ஆதரித்தழைத்து,

Let him not do evil to others who desires not that sorrows should pursue himself.206

"மழலை ததும்பப் பழமறையை
வடித்துத் தெளித்த வார்த்தை யொன்று
மொழியும் பவளச் செங்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
மும்மைத் தமிழ்சேர் கந்தபுரி
முருகா முத்தந் தருகவே"

என்று குமரகுருபர அடிகள் வேண்டுகின்றார்.

இன்னும், சேயோன் என்றும், சேய் என்றும் குறிக்கப்படுகின்ற முருகன் திருவருளைப் பெற்ற ஊர்களின் ஒன்று முன்னாளில் சோழநாட்டிலே சிறந்திருந்து. திருச்சேய்ஞலூர் என்பது அதன் பெயர். தேவாரப் பாடல் பெற்ற சேய்ஞலூர் என்னும் நல்லூர் சண்டேசுர நாயனாரைத் தோற்றுவித்து பெருமையும் உடையதாகும்.

"பூந்தண் பொன்னி எந்நாளும்
பொய்யா தளிக்கும் புனல்நாட்டு
வாய்ந்த மண்ணித் தென்கரையின்
மன்ன முன்னாள் வரைகிழிய
ஏந்தும் அயில்வேல் நிலைகாட்டி
இமையோர் இகல்வெம் பகைகடக்கும்
சேந்த னளித்த திருமறையோர்
மூதூர்ச் செல்வச் சேய்ஞலூா"

என்று சேக்கிழார் பெருமான் இப்பதியின் பெருமையை அருளிப் போந்தார். சூரனோடு போர் புரிய எழுந்தருளிய சேயோன், சிவனை வழிப்பட்டுச் 'சங்காரப் படை' பெற்ற இடமே சேய்ஞலூர் ஆயிற்றென்று கந்த புராணம் கூறும். 'தாதைதைத் தாளற வீசிய சண்டிக்கு' அருள் செய்த தலைவனார் அமர்ந்த திரு ஆப்பாடியும் இதனருகேயுள்ளது.

இன்னும், கொங்கு நாட்டில் அமைந்துள்ள முருகப்பதி திருமுருகன் பூண்டி எனப்படும். 'செருமலைத் திருவேற் செங்கைத் தேசிகன் வழிபாடாற்றும் பெருமை' வாய்ந்தது திருமுருகன் பூண்டியென்று புராணம் கூறும். சேரமான் பெருமாள் உவந்தளித்த பொருளனைத்தையும் பறிகொடுத்த சுந்தரர், 'கொடுகு வெஞ்சிலை வடுக வேடவர் கூறை கொண்டு ஆறலைக்குமிடம்' என்று பாடி இறைவனருளை நாடிய பழம் பதி இப்பூண்டியே.

இக் காலத்தில் முருகன் அருள் பெற்ற ஊர்களின் பெயர் மாறியும் உருக்குலைந்தும் வழங்கின்றன. பெரும்பாலும் வேளூர் - வெள்ளூர் என்றும், சேயூர். செய்யூர் என்றும் சிதைந்துள்ளன. கீழ்வேளூர், கீவளூராயிற்று. சேய்ஞலூர் செங்கனூர் எனச் சிதைந்தது. இங்ஙனம் உருக்குலைந் திருக்கும் ஊர்ப் பெயர்களைத் திருத்தியமைத்தல் முருகவேளுக்குச் செய்யும் திருத்தொண்டு களுள் ஒன்றாகும்.

ஒருமுரு காவென்ற னுள்ளங் குளிர ் வுவந்துடனே
வருமுரு காவென்று வாய்வெருவாநிற்பக் கையிங்ஙனனே
தருமுரு காவென்று தான்புலம் பாநிற்பத் தையன்முன்னே
திருமுரு காற்றுப் படையுடனே வருஞ்சேவகனே.

| | |
|---|---|
| எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை வீயாது பின்சென்று அடும் -207 | எவ்வளவு பெரிய பகையுடையவரும் (அதிலிருந்து ஒரு வகையால்) தப்புவர். ஆனால் தீவினையாகிய பகையோ நீங்காமல் தொடர்ந்து பின்சென்று வருத்தும். |

# பசுக் காத்தல்

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர்.

பசுக்கள் நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை, என ஐந்து வகைப்படும். அவைகளுள், நந்தை கபிலநிறமும். பத்திரை கருநிறமும் சுரபி வெண்ணிறமும், சுசீலை புகை நிறமும். சுமனை செந்நிறமும் உடையனவாம். பசுக்கள் இம்மை மறுமை இரண்டினும் பயனைத் தரும். பசுக்களுக்குச் சாலையை விதிப்படி செய்வித்து, ஆற்றுமண் ஓடைமண் புற்றுமண் வில்வத்தடிமண் அரசடிமண் என்பவைகளால் நிலம் படுத்தல் வேண்டும். முதிர்கன்று இளங்கன்று நோயுற்றகன்று என்னும் இவைகளுக்கு இடங்கள் வெவ்வேறாக அமைத்தல் வேண்டும். நாடோறும் கோசல கோமயங்களைப் புறத்தே நீக்கிச் சுத்தி செய்தல் வேண்டும். கொசுகு வராமல் தூபம் இடல் வேண்டும். தீபங்கள் ஏற்றல் வேண்டும்.

பசுக்களை இயக்குமிடத்து, சிறிதும் வருத்தஞ்செய்யாமல், இரக்கத்தோடும் பலாசங்கோலினாலே மெல்ல ஓங்கி, போ போ என்று இயக்கல் வேண்டும் இரக்கம்மின்றிக் கோபித்து அதட்டி அடிப்பவர் நரகத்தில் வீழ்வர். பசுக்களை சாலையினுள்ளே சுவத்தி என்னுஞ் சொல்லைத் சொல்லி, மெல்ல மெல்லப் புகுவித்து, சிரத்தையோடும் புல்லைக் கொடுத்தல் வேண்டும். நோயுற்ற பசுக்களுக்கு வேறிடம் அமைத்து, மருந்து கொடுத்துப் பேணல் வேண்டும். அட்டமிதோறும் பசுக்களை நீராட்டி, பூச்சூட்டி, அன்னமும் சலமும் ஊட்டி, தூபதீபங் காட்டி, வணங்கல் வேண்டும். பசுகக்ளை வேனிற் காலத்திலே சோலைகளிலும், மழைக் காலத்திலே மலைச்சாரல் வணங்களிலும், பனிக்காலத்திலே வெய்யில் மிகுந்த வெளிகளிலும் இடர் உறாவண்ணம் மேய்த்தல் வேண்டும்.

பசுக்களை வலஞ்செய்து வணங்கித் துதித்துப் புல்லுக் கொடுத்தலும், ஆவுரிஞ்சுகல் நாட்டுதலும், கடவுளுக்கும் ஆசாரியருக்கும், சுவைத் தானஞ் செய்தலும், குற்றமற்ற இலக்கணங்களையுடைய இடபத்தைக் கடவுள் சந்நிதிக்குத் தானஞ் செய்தலும். தேவாலயத் திருப்பணியின் பொருட்டுச் சகடத்திற்கு எருது கொடுத்தலும், இளைத்த பசுவைத் கண்டு இரங்கித் தாம் வாங்கி வளர்த்தலும் பெரும் புண்ணியங்களாம்.

பசுக்கள் தரும் பால் தயிர் நெய் கோசலம் கோமயம் என்னும் பஞ்சகவ்வியங்களையும் கடவுளுக்கு அபிஷேகம் பண்ணுவித்தல் வேண்டும் பாலை இரண்டு மாசம் செல்லும் வரையும் கன்று பருகும்படி விட்டு, பின் கறந்து கடவுளுக்கு அபிஷேகம் பண்ணுவித்தல் வேண்டும் கன்று பாலுண்டு முலையை விடுத்தபோது, சலத்தினாலே முலையைத் கழுவிக் கறத்தல்

20ம் பக்கம் பார்க்க

However great be the enmity men have incurred, they may live The enmity of sin will incessantly pursue and kill.207

# மன்றுளான் மன்றில்

சைவப்புலவர்மணி. வ. செல்லையா

மதுரை நகரத்திலே வைசியகுலத்தில் தனபதி என்பவர் ஒருவர் இருந்தார். அவர் மனைவி பெயர் சுசீலை. இவ்விருவர்க்கும் நெடுங்காலமாகப் புத்திர பாக்கியம் இல்லாமையாற் கவலையடைந்து ஒரு பிள்ளையைத் தத்தெடுத்து வளர்க்க நினைந்தனர். தனபதி தன் சகோதரியின் மகனைத் தனக்குப் புத்திரனாகப் பெற்று மனைவி கைக்கொடுத்தான். அவள் தொழுது வாங்கி அன்போடு வளர்த்து வந்தாள் தனபதிக்கு மனைவிமேற் பாசம் அதிகம். ஆதலின் தனக்குப் பிள்ளை உதவிய தங்கை மீது நன்றி மறந்து மனைவியின் ஏவுதலால் அவனை ஏசிப்பேசிப் புறக்கணித்து வந்தான். இதனால் வெறுப்புற்ற இளையாள் "நீ பிள்ளை பாக்கியமற்றபாவி.என் பிள்ளையாலன்றோ இருமைப் பயனும் அடையப் போகிறாய்" என்று தமயனிடம் கூறலானாள். தனபதி அது கேட்டு நாணினான். மேலைக்காயினும் பிள்ளைப் பேற்றைத் தரவல்ல தவத்தைச் செய்ய வேண்டும் என்று துணிந்தான். தன் செல்வம் எல்லாவற்றையும் மருமகனுக்கே ஆக்கி விட்டு மனைவியுடன் தவஞ் செய்யப் போயினான்.

தனபதி நீண்ட காலமாக வீடு திரும்பவில்லை. தாயத்தார் தனபதியின் மருமகனுடன் வல் வழக்குப்பேசி அவனுக்குக் கொடுத்த வீடு, விளைநிலம் மற்றுஞ் செல்வங்களை எல்லாம் அபகரித்துக் கொண்டனர்.

இச் செயலினால் தனபதியின் தங்கை பெரிதும் வருந்தினாள். தனக்கும் புதல்வனுக்கும் யாரும் உதவ முன்வரமாட்டார்கள் என அறிந்தாள். நமக்குப் புகலிடம் சோமசுந்தரக் கடவுளே என்று துணிவு கொண்டாள். தன் புதல்வனையும் அழைத்துக் கொண்டு திருக்கோயிலையடைந்தாள். சோமசுந்தரக் கடவுளைத் வணங்கி எல்லாருக்குத் தந்தையும் தாயுமாகிய சுவாமி! நீரே அடியேங்களுக்கும் தந்தையும் தாயும். எனது தமயன், தனக்குப் புத்திரன் இல்லாமையால் எனது புதல்வனைத் தனக்கு மகனாக ஏற்றுக் கொண்டு அவனுக்கே தன் செல்வமெல்லாவற்றையும் எழுதி வைத்து விட்டு தவஞ் செய்யப் புறப்பட்டான். பின்பு தாயத்தார் அவற்றினை வல் வழக்குப் பேசிக் கவர்ந்துகொண்டனர் நான் ஆருமற்றவள். மகனும் அறிவு நிரம்பாச் சிறுவன். அறிவுப் பெருங் கடலே! எங்கும் நிறைந்த பரிபூரணனே! தாங்கள் இதனை அறியீரோ என்று விண்ணப்பஞ் செய்தாள். நிலத்தில் விழுந்து வணங்கி அழுது சிறிது நேரம் அயர்ந்து நித்திரையானாள்.

அப்பொழுது சிவபெருமான், அவளுக்கு கனவிலே பிராமண வடிவிலே தோன்றினார். "பெண்ணே நீ பொழுது புலர்ந்த

| | |
|---|---|
| தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை<br>வீயாது அடிஉறைந் தற்று – 208 | தீயவை செய்தவர் தப்பாது கெடுதல், ஒருவனது நிழல் அவனை விட்டு நீங்காமல் அவன் காலடியிலேயே தங்கியிருத்தலைப் போன்றது. |

பின் தாயத்தாரை அரசனாணையினாலே தருமசபைக்கு வருவித்து மறித்து வைத்திரு. நாம் அவ்விடம் வந்து வழக்கினைத்தீர்த்து வைப்போம்" என்று அருளிச் செய்தார். உடனே தனபதியின் தங்கை விழித்தெழுந்து எம் பெருமானின் திருவருளை வியந்தாள். "திக்கற்றவருக்குத் தெய்வம் துணை" என்று நினைவு கொண்டு எம் பெருமானை வணங்கினாள். மகனையும் அழைத்துக் கொண்டு வீடு சென்றாள். விடியற்காலை நித்திரை விட்டெழுந்தாள். மகனுடன் திருக்கோயிலை அடைந்த எம் பெருமானை வணங்கிக் கொண்டு தாயத்தார் வீடுகளுக்குச் சென்றாள்.

"வல் வழக்குப் பேசி நம் செல்வங்களை வலிந்து பெற்றீர். எவரும் இன்று அடுப்பில் நெருப்பேற்ற வேண்டாம். யாரும் ஓரடி எடுத்து அப்பாற் செல்லவிடேன். தரும சபைக்கு வந்து பெரியோர் தீர்த்தபடி நம்முரிமைப் பொருட்களை நம்மிடம் தந்து செல்லுங்கள் பலரும் கேட்க அரச ஆணையிட்டேன்" என்று கூறி அனைவரையும் மறித்து நின்றாள். எல்லாரும் அவளை வைது கடிந்து கலைத்தனர். அவளும் இது முறையோ! இது முறையோ! என்று சொல்லி மகனையும் அழைத்துக் கொண்டு தருமசபைக்குச் சென்றாள். அங்கு வழக்கிட்டு நின்றாள். சபையார். ஏவலாளரை அவளோடு விடுப்பத் தாயத்தாரை மறித்துச் சபைக்குக் கூட்டி வந்தார்கள்.

அப்பொழுது சிவபெருமான் தனபதி போலத் திருவுருக்கொண்டு அங்கு வருகின்றார். திருச் செவியிலே இரத்தின குண்டலங்கள் திருப்புயங்களிலே தோளணிகள். திருமார்பிலே கண்டிகை. மோதிரம் அணிந்த திருக்கரங்கள் இங்ஙனம் யாவும் அணி செய்ய வணிகதுல திலகராய்க் காட்சியளிக்கிறார். திருக்கரங்களை அசைத்துச் சிங்கேறு போல் நடை போட்டுச் சபையை நோக்கி வருகிறார். இங்கே அரசனில்லையோ? பெரியோர்களில்லையோ? அரசர் செங்கோல் கொடுங்கோலானதோ? தெய்வமில்லையோ? தருமம் ஒளித்ததோ? என்று கூறிக் கொண்டு சபையை அடைந்தார். இதனைக் கண்ட தாயத்தார் மனந்தளர்ந் தார்கள். ஆச்சரிய மடைந்து "வழக்கில் வெல்வோம்" என்றிருந்த நிலையொழிந் தார்கள். அச்சமும் நாணமுங் கொண்டு ஒதுங்கி நின்றார்கள். தனபதியாக வந்த சிவபெருமான் தங்கையையும் மருமகனையுங் கட்டித் தழுவி ஐயையோ! வறியவர்களானீர்களே! என்று கூறி அழுதார் அவர்களும் தனபதியார் பாதத்தில் விழுந்து வணங்கினார்கள்.

தனபதியார், கண்ணீர் வெள்ளமாய்ப் பெருக மருமகனைப் பார்த்து "மார்பிலே பஞ்சாயுதம் எங்கே" காலிற் சிலம்பு இல்லையே; காதுகளில் குண்டலங்களைக் காணேன்; வெற்றுடம்பைப் பார்க்கிறேனே என்று சொல்லி வாய் விட்டழுதார். தங்கையின் கண்ணீரைத் துடைத்து "நீங்கள் இனிக் கவலையை விடுங்கள். தாயத்தார் வழக்குத் தோற்றுப்போம் பாருங்கள்" என்றார். " கடும் வட்டி வாங்கவில்லை. ஏழைகளுக்கு ஈயாது விட்டதில்லை. தரும வழியில் சம்பாதித்த என் பொருள் அழியுமா?" என்று கூறி அழுது நின்றார். சோமசுந்தரக்கடவுள்

Destruction will dwell at the heels of those
who commit evil even as their shadow that leaves them not.208

எழுந்தருளியிருக்கும் திக்கை நோக்கி, சிரமேற்கைகூப்பி "மாணிக்கம் விற்ற நமது வைசிய குலத் தலைவரே! எனது தாயத்தார் வழக்கை இச்சபையாரிடத்து நின்று தீர்த்தருளும்" என்றார். பின்பு சபையாரை நோக்கி, அரசனது செங்கோலாகிய நூல் கட்டிய தருமமாகிய தட்டில் உங்கள் நாக்காகிய துலாக் கோலை இட்டு நமது வழக்கையும் தாயத்தார் வழக்கையுஞ் சீர்தூக்கித் தீர்ப்புச் சொல்லுங்கள் என்று கூறி நின்றார்.

அது கேட்ட சபையார்கள் இரு பக்கத்தார்களின் வழக்கையுங் கேட்டார்கள். நன்றாக ஆராய்ந்தார்கள். தாயத்தார் வழக்குப் பொய் வழக்கென்று தீர்பபுக் கூறினார்கள். தாயத்தார் அது கேட்டு அச்சமுற்று நமது தனபதிச் செட்டியார் இவரல்லர் என்றார்ர்கள் அப்பொழுது தனபதியார் கைகொட்டிச் சிரித்து, அவரவர் குடிப் பெயரும், பட்டமும் காணிப்பெயரும், தந்தையார் உடன் பிறந்தார் பெயரும் அவரவர் குணங்களும் சிறிதும் வழுவாது கூறி நின்றார். அது கேட்ட பெரியார்கள் எல்லாரும் "இவரே தனபதிச் செட்டியார்" என்றார்கள். தாயத்தார் நம் வழக்குத் தோற்றது. பாண்டியன் அறிந்தால் நம்மைத் தண்டிப்பான் என்று நினைந்து வீட்டுக்குப் போய் வருகிறேன் என்றும் குளத்துக்குப் போய் வருகிறேன் என்றும் ஒவ்வொரு வார்த்தை கூறிவிட்டு மெல்ல அகன்று விட்டார்கள். அவர்கள் சென்றதும், தருமசபையார் தனபதிச் செட்டியாரின் செல்வம் எல்லாம் அவர் புதல்வனுக்கென்று தீர்ப்பெழுதிக் கொடுத்தார்கள். உடனே தனபதியுருவங் கொண்ட சிவபெருமான் எல்லோருங்காண மறைந்தருளினார்.

சுந்தரேசபாதசேர பாண்டியன், அதைக் கேள்வியுற்றுத் தனபதியுருவங் கொண்டு வந்து மறைந்தவர் சோமசுந்தரக் கடவுள் என்று அறிந்து வியந்தான். தனபதினுடைய புதல்வனுக்குப் பலவரிசைகளும் வழங்கினான். சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயிலைப் பொன்னினாலே புதுக்குவித்தான். தெய்வநீதியே சைவநீதி என்று கொண்டு அரசாண்டு வந்தான்.

---

17ம் பக்கத் தொடர்ச்சி

வேண்டும். ஆசை மிகுதியினால் கன்றுக்குப் பால் விடாது கறந்தவன் நரகத்தில் வீழ்ந்து நெடுங்காலம் வருத்தி, பின்பு பூமியிலே பிறந்த கடும் பசியினாலே வீடுகடோறும் இரப்பன். கபிலையின் பாலைக் கடவுளுக்கே கொடுக்க; அதனைத் தாம் பருகில் நரகத்து வீழ்வர். புலையர்கள் பசுக்களின் சாலையிலே புகுந்தார்களாயின், எண்ணில்லாத காலம் எரிவாய் நரகத்து வீழ்ந்து வருந்துவார்கள்; அவர்களுக்குப் பரிகாரமில்லை பசுக்களை இடர்நீங்கக் காக்காதவர்களும், மலட்டுப் பசுவின் மேலேனும் இடபத்தின் மேலேனும் பாரம் ஏற்றினவர்களும் இடபத்தில் ஏறினவர்களும் நரகத்தில் வீழ்வார்கள்.

| | |
|---|---|
| தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்துஒன்றும் துன்னற்க தீவினைப் பால் -209 | ஒருவன் (உண்மையில்) தன்னைப் காதலிப்பவனாயின், தீவினைப் பக்கம் சிறிதும் நெருங்கக் கூடாது. |

# சுப்பிரமணியக் கடவுள்

சிவஸ்ரீ .ச. குமாரசுவாமிக்குருக்கள்

முன்னொரு காலத்திலே சூரபதுமன் முதலிய அவுணர்கள் தேவர்களுக்கு மிக்க துன்பஞ் செய்தார்கள். தேவர்கள் தங்கள் துன்பத்தைக்கைலாசபதிக்கு முறையிட்டார்கள். சிவன் திருவுளமிரங்கி, தமது நெற்றிக்கண்களினின்றும் ஆறு அக்கினிப் பொறிகளைத் தோற்றுவித்தனர். அப்பொறிகள் ஆறும் ஆறு சிறுவராய்ச் சரவணப் பொய்கையில் வளர்ந்தன. அந்த ஆறு சிறுவரும் உமாதேவியார் ஒருங்கே தழுவ ஒருருவமாயினர். அவரே சுப்பிரமணியக் கடவுள் என்று போற்றப்படுவார். சுப்பிரமணியருக்குக் குமரன், வேலன், முருகன், கந்தன் முதலிய பல நாமங்களுண்டு. சுப்பிரமணியக்கடவுள் ஆறு திருமுகங்களும்,பன்னிரண்டு திருக்கண்களும் பன்னிரண்டு திருப்புயங்களும், இரண்டு திருவடிகளும் உடையார். கொடி, குலிசம், தோட்டி, அஸ்திரம், வேல் என்னும் ஐந்தும் முறையே பொருந்தியகரங்களும் அபயகரமுமே வலக்கரங்களாம். தாமரை, மணி,மழு, தண்டு, வில் என்னும் ஐந்தும் முறையே பொருந்திய கரங்களும் வரதகரமுமே இடத்திருக்கரங்களாம். குமாரக்கடவுள் இன்னும் அடியார்கள் பொருட்டு வேறு பல வடிவங்களைத் தாங்கி அருள்செய்கின்றார். வள்ளிநாயகியார் தெய்வயானை அம்மையார் ஆகிய இருவரும் அவருக்குச் சத்தி என்று சொல்லப்படுவர். சூரன் முதலிய அவுண்ர்கள் இந்திரன் முதலிய தேவர்களை வருத்திச் சுவர்க்கத்தை எரித்துத் தேவர்கள் பலரையும், இந்திரகுமாரனாகிய சயந்தனையும் சிறையில் வைத்தார்கள். சுப்பிரமணியக்கடவுள் பரமசிவனுடைய கட்டளைப்பிரகாரம் வீரவாகு முதலிய வீரரோடும் பூதங்களோடும் சென்று அவ்வசுரர்கள் பலரையுங் கொன்று சூரபதுமனோடு எதிர்த்து யுத்தஞ் செய்தார். சூரபதுமன் பல மாயவடிவங்களைக் கொண்டு யுத்தஞ் செய்தான். சுப்பிரமணிக்கடவுள் அவைகளை மாற்றித் தமது விசுவருபத்தைக் காண்பித்துச் சிறிதே நல்லறிவு வரச்செய்தார். அப்பொழுது சூரபதுமன் அவ்விசுவருபத்தைக் கண்டு ஆனந்தபாஷ்பஞ்சொரிய அதன்வசமாய் நின்றான். முருகக்கடவுள் அவனுடைய அற்ப ஞானத்தை மாற்றியருளினார். சூரபன்மன் ஒரு இருள் வடிவங்கொண்டு தேவர்களை உண்ணும்படி விரைந்து சென்றான். தேவர்கள் அதனையறிந்து.

"நண்ணினர்க் கினியா யோலம் ஞானநா யகனே யோலம்
பண்ணவர்க் கிறையே யோலம் பரஞ்சுடர் முதலே யோலம்
எண்ணுதற் கரியா யோலம் யாவையும் படைத்தா யோலம்
கண்ணுதற் பெருமா னல்கும் கடவுளே யோல மோலம்.

தேவர்க டேவே யோலம் சிறந்தசிற் பரனே யோலம்
மேவலர்க் கிடியே யோலம் வேற்படை விமலா வோலம்
பாவலர்க் கெளியா யோலம் பன்னிரு புயத்தா யோலம்
மூவரு மாகி நின்ற மூர்த்தியே யோல மோலம்"

If a man loves himself, let him not commit any sin however small.209

சூரபதுமன் எங்களை உண்ணும்படி வருகின்றான்.இறைப்பொழுதும் தாமதம் செய்யாது, அவனுயிரையுண்டு அடியேங்களைக் காத்தருளுக என்று வேண்டினர்கள். இந்திரனும் அங்ஙனமே வேண்டினான். சுப்பிரமணியக்கடவுள் தமது திருக்கரத்திலிருக்கும் ஞானரூபமாகிய வேற்படையைச் சூரபதுமன்மீது செலுத்தியருளினார். வேலாயுதமாகிய ஞானசூரியன் செல்லுதலும் சூரபதுமனது இருள் வடிவம் முற்றும் அழிந்தது. சூரபதுமன் வேற்படைவருதலை நோக்கிக் கோபித்து ஒரு மாமரவடிவாய் நின்றான். வேற்படை கோபத்துடன் அம் மாமரவடிவத்தைச் சங்கரித்தது. சூரபதுமன் இறவாதவனாய்த் தனது பழைய வடிவுகொண்டு, தன் உடைவாளை எடுத்துப் போர்செய்ய எண்ணி எதிர்த்தான். வேற்படை அவனுடைய மார்பைப்பிளந்து உடம்பை இருகூறாக்கிப் பெருமானுடைய திருக்கரத்தில் வந்திருந்தது.

சிவபெருமான் கொடுத்த வரத்தினால் அழியாத சூரபதுமன் பிளவுண்ட தன் இரண்டுகூறும் கோழியும், மயிலுமாகிப் போர்ச் செருக்குடன் வந்தான். சுப்பிரமணியக்கடவுள் அவன்மீது கிருபா நோக்கம் செய்தார். அவன் அத்திருவருட்பார்வையால் ஞானம் பொருந்திய மனத்தனான். கடவுள் ஞானமடைந்த கோழியை நோக்கி, நீ நம்முடையதேரிற் கொடியாய்ச் சென்றிருந்து கூவுதி என்றருள, அது அங்ஙனமே செய்தது. குமாரக்கடவுள் ஞானத்தைப் பெற்றுநின்ற மயிலை வாகனமாகக் கொண்டு, செலுத்தியருளினார். தேவர்கள் கடவுளுடைய பெருங்கருணையைத் துதித்தார்கள்.

வீரவாகுதேவர் முருகக்கடவுளுடைய கட்டளைப்படி சயந்தன் முதலியோரது விலங்கை அறுத்துச் சிறையை நீக்கி அருள் செய்தார். வருணன் அவுணனுடைய பட்டினமாகிய மகேந்திரபுரியை அழித்தனன்.

ஒரு காலத்திலே பிரமா தம்மை நமஸ்காரம்பண்ணாது கர்வத்தோடு சென்றமையைச் சுப்பிரமணியக்கடவுள் நோக்கி, அவரைப் பிரணவப்பொருள் வினாவினார் அவர் சொல்ல அறியாது மயங்க, குட்டிச் சிறையில் வைத்துச் சிலகாலம் உலகங்களைப் படைத்தார். பின் சிவபெருமானுடைய விருப்பின்படி பிரமாவைச் சிறையினின்றும் நீக்கியருளினார். பின்னர் பிரணவப்பொருளை அகத்தியமுனிவருக்கு உபதேசித்தருளினார்.

சுப்பிரமணியக்கடவுளை மெய்யன போடு தியானிப்போர் சிவபெருமானுடைய திருவடிநீழலை அடைவார்கள்.

கோழிக் கோடியோன்றாதை போலும்
கொம்பனாள் பாகங் குளிர்ந்தார் போலும்
ஊழி முதல்வருந் தாமே போலு
முள்குவா ருள்ளத்தி லுள்ளார் போலும்
ஆழித்தேர் வித்தகருந் தாமே போலு
மடைந்தவர்கட் கன்பராய் நின்றார் போலும்
ஏழு பிறவிக்குந் தாமே போலு
மின்னம்பர்த் தான்றோன்றி யீச னாரே.

திருநாவுக்கரசு சுவாமிகள்

மேல்வளமெல் லாமமைந்தும் வீர மகேந்திரந்தான்
றோல்வியுற்று மாய்ந்ததே சோமேசா - ஞாலமிசை
ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு.

சோமேசர் முதுமொழி வெண்பா

அருங்கேடன் என்பது அறிக மருங்குஓடித்
தீவினை செய்யான் எனின் – 210

ஒருவன் செந்நெறியிலிருந்து ஒரு பக்கமாக விலகிச் சென்று, பிறர்க்கு தீமை செய்யாதிருப்பானானால், அவன் கேடில்லாதவன் என்பதை அறிந்து கொள்ளலாம்.

சைவசித்தாந்தம் பயிலவோம்

# சிவப்பிரகாசம்

மட்டுவில் ஆ. நடராசா

*தீக்கை முறைமை*

"மூவகைஆ ருயிர்வர்க்கம் மலத்தார் கன்ம
மூலமலத் தார் மூன்று முடையா ரன்றே
தீவகமாம் எனஉருவாய் வந்து நாதன்
திருநோக்கால் பரிசத்தால் திகழும் வாக்கால்
பாவனையால் மிகுநூலால் யோகப் பண்பால்
பரவிவரும் அவுத்திரியாற் பாச நாசம்
மேவ அரு ளுதவும்அவுத் திரியிரண்டு திறனாம்
வியன் கிரியை ஞானமென விளம்பு மாறே"

இ-ள்:- மலத்தார் - ஆணவ மலமொன்றே யுடைய விஞ்ஞானகலர், கன்ம மூலமலத்தார் - கன்மலமும் ஆணவ மலமுடைய பிரனயாகலர் மூன்றும் உடையார் - மாயமலம் கன்மமலம் ஆணவமலமென்னும் மூன்றுமுடைய சகலர் என, ஆருயிர் வர்க்கம் மூவகையாம் - நிறைந்த உயிர்வர்க்கம் மூன்று வகையாகும், நாதன் தீவகமாம் என உருவாய் வந்து- இம்மூவகை உயிர் வர்க்கங்களுள் சகலருக்குப் பரமசிவன் பார்வை விலங்குபோல உருவத் திருமேனி கொண்டுவந்து, திரு நோக்கால்- சட்சு தீட்சையாலும், பரிசத்தால் - பரிச தீட்சையாலும், திகழும் வாக்கால்- விளங்குகின்ற வாசக தீட்சையாலும், பாவனையால்- மானத தீட்சையாலும், மிகு நூலால்- மேலாகிய சாத்திர தீட்சையாலும், யோகப் பண்பால்- யோக தீட்சையாலும், பரவிவரும் அவுத்திரியால்- இவ்வாறையும் அங்கமாகக் கொண்டு வருகின்ற அவுத்திரி தீட்சையாலும், பாவ நாசம் மேவ அருள் உதவும்- மும்மலங்களும் நாசமடைய அருள் செய்வார், அவுத்திரி இரண்டு திறனாம்- அவுத்திரி தீட்சை இரண்டு வகைப்படும், வியன் கிரியை ஞானம் என விளம்புமாறே- அவை பெரிய கிரியாவதி என்றும் ஞானாவதி என்றும் சொல்லப்படும். எ-று

பண்பு - முறைமை

விஞ்ஞானாகலர் : விஞ்ஞானாகலர் என்றால் விஞ்ஞானம் எனப்படும் விசேட அறிவினால் கலை முதலிய தத்துவங்களின் ஆதிக்கத்திலிருந்து நீங்கியவர் என்பது பொருள். விஞ்ஞான + அகலர் = விஞ்ஞானாகலர். இவர்கள் ஆணவ மலம் மாத்திரம் உடையவர்கள். இவர்களுக்குச் சுத்தமாயா காரியங்களாகிய கலாதி தத்துவங்களால் ஆக்கப்பட்ட சரீரம் உண்டு. இவர்களுக்குரிய புவனங்கள் அசுத்த மாயைக்கு மேல் உள்ளன. சுத்தமாயா காரியங்களாகிய கலாதி தத்துவங்களைப் பெற்ற இவர்கள் விஞ்ஞானத்தால் அத்தத்துவங்களிற் கட்டுப்படா திருத்தலின் விஞ்ஞானாகலர் எனப் பெயர் பெறுவர் இவர்களில் பக்குவர் அபக்குவர் என இரு பிரிவினருண்டு பக்குவர் சிவானுக்கிரகத்தால் பரமுத்தி அடைவார் அபக்குவரில் உத்தமர்,

Know ye that he is freed from destructoin who commits no evil, going to neither side of the right path.210

மத்திமர், அதமர் என மூன்று பிரிவினர் உண்டு உத்தமர் அணுசதாசிவர் முதலியோராய்ச் சதாசிவ தத்துவத்தில் வசிப்பர். மத்திமர் அட்ட வித்தியேசுரர் முதலியோராய் ஈசுரதத்து வத்தில் வசிப்பர். அதமர் சுத்தவித்தியா தத்துவத்தில் வசிப்பர்.

இவர்களுக்கு ஆகாமிய கன்மம் ஏறாமையால், கன்மம் இல்லையெனக் கூறப்படுகின்றது. பிரகிருதியின் காரியமாகிய முக்குணங்களால் வரும் மயக்கமும் சுகதுக்க மோகங்களும் இல்லாமையால் இவர்களுக்கு மாயா மலம் இல்லையெனக் கூறப்படுகின்றது. இவர்களுக்கு வினை இல்லாமையால் இருவினை யொப்பு இல்லை.

விஞ்ஞானாகலரில் அனாதியே மலபந்தம் மாத்திரமுடைய விஞ்ஞானா கலரும், கன்மமலம் நீங்கப் பெற்ற பிரளயாகலரும் மாயா மலமும் கன்ம மலமும் நீங்கிப்பெற்ற சகலருமென இருவகையினர் உண்டு. இவர்களுக்கு எடுத்த பிறவியேயன்றி வேறுபிறவி இல்லை இறைவன் இவர்களுக்கு அறிவுக் கறிவாய் நின்று நிராதார தீட்சை செய்து ஆணவ மலத்தை நீக்கியருளுவர்.

பிரளயாகலர் :- பிரபஞ்ச அழிவாகிய பிரளயத்தில் கலாதி தத்துவங்கள் நீங்கப் பெற்றோர் பிரளயாகலர் எனப்படுவர். இவர்களுக்கு அசுத்தமாயா காரியமாகிய கலாதி தத்துவங்களால் ஆக்கப்பட்ட சரீரம் உண்டு. இவர்களுக்குப் பிரளயத்தின் பின் பிறவி இல்லாமையால் பிரளயாகலர் எனப்படுவர். இவர்களுக்கு மாயை உண்டாயினும் முக்குணங்களால் வரும் மயக்கமும் சுக துக்க மோகமும் இல்லாமையால் மாயை இல்லையெனக் கூறப்படும். இவர்கள் ஏனைய இரு மலங்களாலும் பிணிப்புண்டமையின் இருமலத்தார் எனப்படுவர். கன்மம் உளதாதலின் இவர்களுக்கு ஒரு பிரளயத்திற் சில பிறவிகள் உண்டு.

இவர்கள் அநாதியே மலகன்மம் மாத்திரமுடைய பிரளயாகலரும் சகலரிலிருந்து பக்குவ விசேடத்தால் மாயா மலம் நீங்கப் பெற்ற பிரளயாகலருமென இருவகைப்படுவர். இவர்களுக்குரிய புவனங்கள் அசுத்த மாயைக்கும் அராக தத்துவத்துக்கும் இடையிலே உள்ளன.

இவர்களுக்குப் பரமசிவன் மான் மழுவும் நாற் புயமும் நீலகண்டமும் முக்கண்ணும் உடையவராய் வெளிப்பட்டு நிராதார தீட்சை செய்து மலத்தை நீக்கியருளுவர்.

சகலர் :- இவர்கள் மும்மலங்களு முடையவர் கலாதி தத்துவங்களோடு கூடியவரான படியால் இவர்கள் சகலரெனப் படுவர் இவர்களுக்குரிய புவனங்கள் மூலப் பிரகிருதி முதல் பிருதிவி முடியவுள்ள தத்துவங்களில் உள்ளன. இருவினை யொப்பும் மலபரிபாகமும் நிகழ்ந்து தீவிரதர சத்தி நிபாத முடையவர்களுக்குச் சிவபெருமான், மானுட சரீரமுள்ள சுத்தான்மா வாகிய ஒரு ஞானியின் ஆன்மாவிற் பிரவேசித்துக் குருவடிவாய் எழுந்தருளி வந்து சாதார தீட்சை செய்து ஞானத்தைக் கொடுத்துப் பாசத்தை நீக்கி அருள் புரிவார்.

"தீக்ஷா" என்ற சொல்லுக்கு ஞானத்தைக் கொடுத்து மலத்தைக் கெடுத்தல் என்பது பொருள். சட்சு தீட்சை, பரிச தீட்சை, வாசகதீட்சை, மானத தீட்சை, சாத்திர தீட்சை, யோக தீட்சை, அவுத்திரி தீட்சை, எனத் தீட்சை ஏழு வகைப்படும்.

திருநோக்கால் :- மீன் தனது முட்டையைப் பார்த்து அதைக் குஞ்சாக்குவதுபோல, குரு சீடன் மீது தனது கிருபா நோக்கத்தைச் செலுத்தி, அவனுடைய சஞ்சித வினையை அறுக்கும் இத்தீட்சை நயனதீட்சை எனவும் சட்சு தீட்சை எனவுங் கூறப்படும்.

பரிசத்தால் :- கோழி தனது முட்டையைப் பரிசிப்பது போல, குரு தனது கர சரணங்களால் சீடனைப் பரிசித்து அவனது ஆணவ மலத்தை நீக்குதல் பரிச தீட்சை எனப்படும்.

திகழும் வாக்கால் : இத் தீட்சை குரு சீடனுக்கு உபதேசம் செய்வதாகும். அவரவர் வருணத்துக்கும் ஆச்சிரமத்துக்கும் பக்குவத்திற்கும் ஏற்ப உபதேசம் வேறுபடும். ஐந்தெழுத்தை உபதேசிக்கும் இத்தீட்சை வாசக தீட்சை எனப்படும்.

பாவனையால் :- ஆமை தானிட்ட முட்டையை நினைத்து அதைக் குஞ்சாக்குவது போல, குரு சீடனைத் தனது அருளுருவாகப் பாவித்து அவனுடைய மாயா மலத்தை நீக்கும் இத்தீட்சை மானத தீட்சை என்று சொல்லப்படும்.

நூலால் :- இது சாத்திர தீட்சை எனப்படும். பதி,பசு, பாசங்களின் இலக்கணங்களையும் பசு பாசத்தை விட்டு நீங்கிப் பதியை அடையும் முறையையும் உபதேசித்தலே இத்தீட்சையாகும்.

யோகப் பண்பால் :- சிவயோகம் செய்யும் முறையை உபதேசிக்கும் இத்தீட்சை யோக தீட்சை எனப்படும்.

அவுத்திரியால் : இது அவுத்திரி தீட்சை எனப்படும் அவுத்திரி ஓமம் குண்டம் அமைத்து மண்டல மிட்டு அக்கினி காரியஞ் செய்து பாசத்தை நீக்கும் இத்தீட்சை ஞானத்தையுடைய ஞானவதி எனவும் கிரியையை உடைய கிரியாவதி எனவும். இரு வகைப்படும்.

குண்டம் மண்டலம் முதலியவற்றை அகத்தே கற்பித்து ஆகுதி முதலியவற்றையும் அகத்தே செய்தல் ஞானவதி எனவும் குண்டம் மண்டலம் முதலிவற்றை அமைத்து ஆகுதி முதலியவற்றையும் புறத்தே செய்வது கிரியாவதி எனவுங் கூறப்படும்.

முன்னர்க் கூறப்பட்ட ஆறு தீட்சைகளும் சுதந்திரமாகச் செய்யப்படுவனவும். அவுத்திரிக்கும் அங்கமாகச் செய்யப்படு வனவுமென இரு வகைப்படும் சுதந்திரமாகச் செய்யப்படுந் தீட்சைகள் அவுத்திரிக்கு உரியரல்லாதாருக்குச் செய்யப்படுவன.

9. விருபியமந் திராதிகாரம் அர்ச்சனாதி காரம்
மேவும்யோ காதிகாரம் எனச்சயம விசேடம்
வரும் பொருவில் நிருவாண மந்திரங்கள் பதங்கள்
வன்னங்கள் புவனங்கள் தத்துவங்கள் கலைகள்
இரங்க டைவில் தொகை பதினொன் றெண்பத்தொன் றைம்பத்தொன்
றிருநூற்றோ டிருபத்து நாலாறா றைந்திற்
பரந்த நெறி யறுவகையும் ஒருவிநினை வரிதாம்
பரபதத்துள் உயிர்விரவப் பயிற்று மன்றே.

இ-ள் சமய விசேடம்- சமயதீட்சை விசேடதீட்சை ஆகிய இரண்டு, விரும்பிய மந்திர அதிகாரம் அர்ச்சனை அதிகாரம் மேவும் யோக அதிகாரம் என வரும்- விரும்பப்படும் மந்திரங்களுக்கு அதிகாரம்

அர்ச்சனைக்கு அதிகாரம் அதற்கு இனமாயுள்ள யோகத்துக்கு அதிகாரம் எனச் சொல்லப்பட்டு வரும் , பொருவில் நிருவாணம்- ஒப்பற்ற நிருவாண தீட்சையானது, மந்திரங்கள் பதங்கள் வன்னங்கள் புவங்கள் தத்துவங்கள் கலைகள் இரங்கு அடைவில் தொகை- மந்திரங்கள் பதங்கள், எழுத்துக்கள், புவனங்கள் தத்துவங்கள் கலைகள் என்று சொல்லப்பட்ட முறையிலே அவற்றின் தொகை பதினொன்று எண்பத்தொன்று ஐம்பத்தொன்று இருநூற்றோடு, இருபத்து நாலு, ஆறாறு ஐந்தில் பரந்தநெறி அறுவகையும் ஒருவி- பதினொன்று. எண்பத்தொன்று, ஐம்பத்தொன்று, இருநூற்றிருபத்து நாலு, முப்பத்தாறு, ஐந்து ஆக விரிந்த ஆறு அத்துவாக்களையும் நீக்கி, நினைவு அரிதாம் பரபதத்துள் உயிர் விரவப்பயிற்றும் நினைத்தற்கரிய மேலான பதவியே ஆன்மாவைப் பொருந்தச் செய்யும் எ-று அத்துவா-வழி

மந்திரங்கள், பதங்கள், வன்னங்கள். புவனங்கள, தத்துவங்கள் என்னும் ஐந்தும்மனம் வாக்குக் காயங்களாகவும் கலை இவற்றைச் செலுத்தும் சத்தி வடிவாகவும் இருத்தலால். அத்துவாக்கள் கன்மம் ஈட்டுவதற்கும் கடவுளை வணங்கி முத்தியடைவதற்கும் வழிகளாகின்றன.

முன்னர் கூறிய ஞானாவதி கிரியாவதி தீட்சைகள் ஒவ்வொன்றும் சமயதீட்சை, விசேடதீட்சை, நிருவாண தீட்சை என மூன்று வகைப்படும். அதிகாரம் - யோக்கியம், தகுதி

சமயதீட்சை பெற்றோர் மந்திரங்களை உச்சரிப்பதற்கு யோக்கியர் இவர்களுக்குச் சமயாதிகாரம் மாத்திரம் உண்டு.

விசேட தீட்சை பெற்றோர் கிரியை யோகங்களைச் செய்வதற்கு யோக்கியர் எனவே நிருவாண தீட்சை ஞானத்துக்கு யோக்கியம் என்பது பெறப்படும்.

நிருவாண தீட்சை பாசத்தை நீக்கிச் சிவபெருமானுடைய திருவடியை அடையும்படி செய்யும் தீட்சையாகும். அது சத்தியோ நிருவாண அசத்தியோ நிருவாணம் என இரு வகைப்படும். சத்தியோ நிருவாண தீட்சை உடனே முத்தியைக் கொடுக்கும் அசத்தியோ நிருவாணம் தீட்சை தேகாந்தத்தில் முத்தி கொடுக்கும்.

நிருவாண தீட்சையின்போது ஆசாரியர் சீடனுடைய ஆறு அத்துவாக்களையும் சுத்திசெய்து மலத்தை நீக்கி ஞானத்தைக் கொடுத்துப் பிறவியை ஒழிப்பர்.

அத்துவ சுத்தியாவது ஆறு அத்துவாக்களிலும் சஞ்சிதமாயிருக்கும் கன்மங்களை நசித்தல் கன்மம் நசிய மாயை நீங்கி ஆணவத்தின் தடை ஒழியும்.

ஆறு அத்துவாக்களின் மந்திரம் பதத்திலும் பதம் வன்னத்திலும் வன்னம் புவனத்திலும் புவனம் தத்துவத்திலும் தத்துவம் கலையிலும் ஒடுங்க ஒடுக்கி, கலையைத் திரோதான சத்தியிலும் திரோதான சத்தியைச் சிவத்திலும் ஒடுக்குவதே அத்துவ சுத்தி எனப்படும்.

*Kanthapuranam*

# THE DEFEAT OF THARAKASURA

*V. Sivarajasingam.*

Tharaka now realized that only he was spared but he stood naked bereft of his crown and all his weapons. Am I to believe, thought he, that this child enemy has overpowered me, putting me to this shameful plight? Nothing is left on me with which to attack him. I will send upon him the all-destructive and invincible weapon given to me by Lord Siva. Summoning fresh energy, he cast what is known as the Parameswara Trident, upon Kumaravel.

As it sped towards him shedding light and thunder, the celestials stood aghast incapable of imagining the impending holocaust. Meanwhile, as the weapon approached him Murugavel reached out a hand and got hold of it as if he were the owner. Tharaka stood dumbfounded. He realized that Skanadakumara could never be defeated in fair fighting. He therefore decided to resort to wizardry. Chanting a mantra he assumed several forms and sustaining at different places of the battlefield, began to attack the devas. The devas entreated the Lord to save them from being devoured and devastated by the Azura. Murugavel felt that no more should he spare the Titans life and instructing the divine javelin in hand to instantly destroy Tharaka and Mount Kravuncha, sped it across the sky.

The weapon sped forth belching out fire and venom and reaching Tharaka plunged into his granite body, and came out of it drenched with blood. The invincible Tharaka plummeted to the earth like a huge rock falling from a mountaintop. Yelling out a thunderous roar that cleft the sky, Tharaka fell dead. Realizing the downfall and the death of their leader, the defeated army scattered and fled berserk on all sides. Meanwhile the Vel – javelin bringing back the knights to consciousness hitherto lying insensible under the influence of the black magic of the Krowuncha mountain bathed in the Ganges to purify itself from the sinful taints and returned to the hand of Skanda kumara. Virabahu and the knights now free from the swoon assembled before the Lord and said,

" We have been subject to untold suffering and misery under the cruel hand of Tharakasura. Now that you have defeated and destroyed him we are greatly relieved. As a humble mark of our gratitude to your inestimable succour, we are desirous of offering our modest oblations, which we pray you shall be pleased to accept", As Lord Skanda conceded to their request, the hundred thousand and nine knights, the celestials and the dwarf demons then got together and set everything ready for the Poojah. They bathed the Lord in scented water chanting the six lettered mantra. They attired him in dazzling clothes, bedecked him with jewels, garlanded him with circles of Kadamba and Katpaka flowers. They eulogized his prowess and triumph and feats in garlanded verse.

While the celestials were thus celebrating the victory, Tharaka's queen Sowri, on hearing the death of her Lord, mourned aloud, tears streaming down in torrents, recalling his acts of valour and overwhelming victories, "Am I, Oh Lord, to believe the words that strike my ears?. Can it be true that my invincible Lord had been vanquished and killed by an imp of a God? Never did it occur even in the wildest of my dreams that you would be cowed down by any human being, celestial or a Titan. You only thought of the boons Lord Siva granted you; but little did you ponder over his dubious words while bestowing the boons. It is useless blaming any one if it has been destined for you to die and for me to be a widow".

BOOK REVIEW

# THIRU GNANA SAMBANTHAR - THE SAIVA SAINT.

By S. Ratnapragasam.

Thirugnanasambanthar was one of the four distinguished Saints (nayanmars) venerated most by Saiva from amongst a galaxy of sixty-three canonized Saiva saints. Gnanasambanthar was not born in this world, like other mortals, to redeem his past karma. He was sent here by Divine will so that he could achieve certain ideals in resuscitating the Hindu religion within the short period of his life He was born with the main objective of benefiting the world. One School of thought. consider him an incarnation of Lord Skanda, popularly known in South Sri Lanka as Kataragama Deio.(தெய்வம்)

During Sambanthar's time ( 7th Century A.D) Yagnas were a popular religious practice in northern India as an ancient tradition. Live animals were sacrificed as offerings in these yagna fires as the finale of the Yagna rites and the dead carcasses thereof were consumed by the participants as "*prasath*". Tamils living in South India set their face against this horrendous religious practice; they hated it, rebelled against this form of sacrifice and started embracing religions like Jainism and Buddhism, which prohibit animal sacrifice.

Tamils proudly claim five renowned epics in the Tamil language. But Secvaka Sinthamani and Valaiyapathy the foremost of the five expound the merits of Jainisim. Manimekalai and Kundalakesi are primarily Buddhistic texts. Silappathikaram alone carries some references to Hindu religious practices. Its invocation verse makes no reference to God almighty, but hails the grace of the moon. the Sun and the rain. As admitted by the two authors themselves Silappathikaram was indeed the forerunner of that great Buddhist epic Manimekalai. Strangely, little or no reference is made in these epics to the importance of the Hindu precepts and practices. This unfortunate situation arose, as there was hardly anybody, in this period. to explain to the people the greatness of the Saiva religion and its merits. As to how one could so beautifully arrange his worldly life according to the Saiva doctrine and eventually attain heavenly beatitude, with an individual's effort, was not adequately explained to the ordinary masses. As a consequence, the Hindu religion lay hidden from the ordinary folk and the other religious faiths prospered. Sambanthar's advent proved highly inimical to the cause of those religions.

Another significant contributory factor was that the adherents of the Saiva doctrine then were exclusively the Brahmins. The Slokas and mantras they chanted in their prayers to God were mostly in Sanskrit and the medium of all Hindu rituals was confined to the Sanskrit language, to the detriment of their mother tongue, Tamil. In this background, Thirugnanasambanthar felt it his bounden duty to propagate the Hindu religion and the Tamil language. He boldly declared himself as Tamil Gnanasampanthan and hailed (Sivaperuman) Siva, the Lord almighty, as a Saivaite.

Jainisim reigned supreme all over the Pandian land at that time. Religions that deny the existence of one God almighty, the Paramathma and the Athma (soul), could not spread adequate light to remove the ignorant darkness which' enwrapped the Tamil land then. Gnanasambanthar stressed that even local shrines, their environment and the presiding Deities served as foci of devotion, even for souls advanced in spirituality. By his more than thirty miracles, he proclaimed the significance of the Sacred Ash of the Hindus to the whole world and helped people remove their ignorance. The Sacred Ash represents the Grace of God that illumines a soul on the removal there from of its inherent impurity of mala: it is rubbed on the forehead of people to remind them of the Grace of God which they have to seek daily.

["Ashes are produced by the burning of cow dung in the sacred fire. Cow dung is symbolical of the *mala* — power (Pasu-malam) in man

- Pasu being a name for soul as for cow: and malam being a name for our ignorance (Pasa) and cow dung. When malam that envelopes the soul is burnt by fire of Gnanam or Pure wisdom, the Grace of God shines forth: and this Grace is symbolized by the sacred ashes—white in colour"]

When Gnanasambanthar arrived in Pandiyan territory, there were only two persons who were adherents of the Hindu faith then- viz: Mangayatkarasi, the Queen and her minister Kulachchirayar. With Divine grace, Gnanasampanthar succeeded in converting all its people to Saivam. The Holy Ash (திருநீறு) was the only instrument he used to achieve his mission. He was free of any caste consciousness. But for the timely birth of Gnanasambanthar the Hindu religion would have been as dead as the Dodo. Preserving the religion of the Hindus for posterity was his greatest contribution. His object was to maintain and uphold Vaithika Saivam – the religion of the Vedas and Agamas.

In a brief life-span of sixteen (16) years his devotional outpourings to the Lord exceed 16000 decads, containing well over 160,000hymns popularly known as Thevaram " Garland to god". So says the celebrated authority Umapathy Sivachariyar. It is our great misfortune that most of these hymns were forgotten as lost and only 384 decads, comprising about 3840 hymns are available to us today. He was a born poet and a perfect master of the musical art. His thevarams kindle in our hearts true piety and love. He displayed in his hymns the beauties of "*Isaittamil*".

Gnanasambanthar realized the importance of temple worship. He was grief struck when he witnessed the sufferings of people along the path of his tours. He paid special homage and displayed intense devotion to "Murthis" enshrined in the historic temples spread all over South India, He was compassionate enough to perform miracles and provide relief to suffering parties. . As his objectives were achieved, he had the premonition that his time to depart from this world was fast approaching. But his parents felt it to be their duty to arrange a marriage for their son in marriageable age. They selected a suitable partner for him and took the couple to a temple " Thiru Nallur Peru Manam" to solemnize his marriage. The dutiful son who did not wish to displease his parents just indicated that a marriage for him was unnecessary; he was conscious of the rituals in a Hindu wedding where both the bride and the bride groom had to swear to remain faithful rock—like to wedded life by symbolically placing the bride's leg on the grinding stone ( அம்மி) a piece of rock; he averted this swearing in ceremony by not adhering to his parents arrangement. Having offered his prayers at the temple, Gnanasambanthar extemporized a thevaram in praise of the presiding Deity when a Divine announcement. " You both enter and merge in this light " was heard from the sanctorum of the temple where a brilliant light appeared. The Divine order was obeyed by the couple and the merger was complete.

In the Siddhanta doctrine God is one sublime glow of blissful intelligence in whose presence the various actions necessary for the movement of the Universe take place. Gnanasambanthar's farewell message to the Saiva public may be summarized thus:

Always wear the sacred Ashes
Always chant Namasivaya, the five-letter mantra
Always dedicate yourself in service.

The story of the life of Thirugnanasambantha Nayanar, the eminent Saiva Saint, is available in English in a small book of 45 pages authored by S.Sabaratna Mudaliyar of Kokuvil. It has been reprinted in 2001 by the Kumaran Press. 201, Dam St. Colombo 12. It's first edition was a translation from Periyapuranam and it appeared far back in the year 1920.The new edition will meet the needs of the present generation and will be useful reading especially to non-Saiva. This book which deals with his life, covers exhaustively all miracles performed by the Nayanar to relieve the suffering of persons during his extensive tour of historic Saiva shrines scattered all over South India, Miracles of alien religions cannot stand a comparision with those of Gnanasambanthar. It also elaborates how Sambanthar achieved his main objective of benefiting his co-religionists who were menaced by the strong influence of heretical faiths.

# நினைவிற் கொள்வதற்கு

| | | | | |
|---|---|---|---|---|
| கார்த்திகை | 1. | 16 - 11 - 2001 | வெள்ளி | மாதப்பிறப்பு |
| | | | | ஸ்கந்த ஷஷ்டி விரதாரம்பம் |
| | 3. | 18 - 11 - 2001 | ஞாயிறு | சதுர்த்தி விரதம் |
| | 4. | 19 - 11 - 2001 | திங்கள் | சோமவார விரதம் |
| | | | | சிறப்புலியார் குருபூசை |
| | 6. | 21 - 11 - 2001 | புதன் | ஸ்கந்த ஷஷ்டி விரதம் |
| | 11. | 26 - 11 - 2001 | திங்கள் | சோமவார விரதம் |
| | 13. | 28 - 11 - 2001 | புதன் | பிரதோஷ விரதம் |
| | 15 | 30 - 11 - 2001 | வெள்ளி | பூரணை விரதம் |
| | | | | திருக்கார்த்திகை விரதம் |
| | | | | சர்வாலய தீபம், வீடுகளின் தீபம் |
| | | | | குமராலய தீபம், |
| | | | | கணம்புல்லர் குருபூசை |
| | 16. | 1 - 12 - 2001 | சனி | விஷ்ணுவாலய தீபம் |
| | | | | விநாயக விரதாரம்பம் |
| | 18. | 3 - 12 - 2001 | திங்கள் | சோமவார விரதம் |
| | 19. | 4 - 12 - 2001 | செவ்வாய் | சங்கடஹரசதுர்த்தி விரதம் |
| | 21. | 6 - 12 - 2001 | வியாழன் | ஆறுமுகநாவலர் குருபூசை |
| | 23. | 8 - 12 - 2001 | சனி | மெய்ப்பொருளார் குருபூசை |
| | 24. | 9 - 12 - 2001 | ஞாயிறு | ஆனாயர் குருபூசை |
| | 25. | 10 - 12 - 2001 | திங்கள் | சோமவார விரதம் |
| | 27. | 12 - 12 - 2001 | புதன் | பிரதோஷ விரதம் |
| | 29. | 14 - 12 - 2001 | வெள்ளி | அமாவாசை விரதம் |
| | 30. | 15 - 12 - 2001 | சனி | மூர்க்கர் குருபூசை |


*சிலா விக்கிரகம், வார்ப்பு விக்கிரகம், விளக்குகள், ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்.*

*தொடர்புகளுக்கு :*

**K. RATNASABAPATRHY**

**ST. THULASINGAM STREET, PUDUPET,**

**SOUTH INDIA.**



**Regd. No. QD / 19 / News 2001** இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால் இல.195, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு-13, லக்ஷ்மி அச்சகத்தில் அச்சிட்டு 15-11-20001 இல் வெளியிடப்பட்டது.